
# மிருகக்காட்சிச்சாலை அபிவிருத்தி மற்றும் நலனோம்பு நிதியம் விலங்குகளின் நலனோம்பலுக்காக பயன்படுத்தப்படுகின்றதா என்பதை மதிப்பீடு செய்தல்



அறிக்கை இலக்கம் : பீஈஆர்/இசெட்எவ்/2017/08

## தேசிய கணக்காய்வு அலுவலகம்

**செயலாற்றல் கணக்காய்வு பிரிவு**

**உள்ளடக்கம்**

| | | |
|---|---|---|
| 01. | நிறைவேற்றுப் பொழிப்பு | 1 |
| 02. | அறிமுகம் | 3 |
| 2.1 | பின்னணி | 3 |
| 2.2 | கணக்காய்விற்கான அதிகாரம் | 9 |
| 2.3 | கணக்காய்விற்கான தலைப்பினை தெரிவு செய்தமைக்கான காரணம் | 9 |
| 2.4 | கணக்காய்வு நுழைவு | 9 |
| 2.5 | கணக்காய்வின் நோக்கங்கள் | 10 |
| 2.6 | கணக்காய்வு கட்டளை விதிகள் | 10 |
| 2.7 | கணக்காய்வு விடயப்பரப்பு | 11 |
| 2.8 | விடயப்பரப்பு மட்டுப்படுத்தப்படல் | 11 |
| 3. | விரிவான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பரிந்துரைகள் மற்றும் நிறுவனத்தின் கருத்துரைகள் | 12 |
| 3.1 | மிருகக்காட்சிசாலைகள் அதிகாரச்சட்டம் | 12 |
| 3.2 | விலங்குகளின் நலனோம்பல் | 17 |
| 3.3 | ஊழியர் நலனோம்பல் | 44 |
| 3.4 | பொதுவான அவதானிப்புகள் | 47 |
| 4. | பரிந்துரைகள் | 51 |
| 5. | முடிவுரை | 55 |
| | பின்னிணைப்பு 01 | 56 |

## 01. நிறைவேற்றுப் பொழிப்பு

காட்டு விலங்குகளை தொகுப்பொன்றாக கொண்டு 1920 ஆம் ஆண்டின் முன் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு 1936 யூலை 01 ஆந் திகதி அரசாங்கத்திற்கு சுவீகரிக்கப்பட்ட தெஹிவளை மிருகக்காட்சிசாலை 1946 ஆம் ஆண்டின் போது சுயாதீனமான அரச திணைக்களமொன்றாக தாபிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் தேசிய மிருக காட்சிசாலைகள் திணைக்களத்தின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் 1982 இன் 41 ஆம் இலக்க தேசிய மிருகக்காட்சிசாலைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஆசியாவின் பழமையான மிருகக்காட்சி சாலையான தெஹிவளை மிருகக்காட்சி சாலைக்கு மேலதிகமாக பின்னவல யானைகள் சரணாலயம், பின்னவல மிருகக்காட்சிசாலை, ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா மற்றும் கோனபொல விலங்குணவு பண்ணை மிருகக்காட்சிசாலை திணைக்களத்திற்கு உரியவை ஆகும்.

இந்த கணக்காய்வின் நோக்கமானது மிருகக்காட்சி சாலைகள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம் விலங்குகளின் நலனுக்காக பயன்படுத்தப்படுகின்றதா என்பதை மதிப்பாய்வு செய்தலாகும். இந்த கணக்காய்வின் பிரதான அவதானிப்புக்களுக்கிடையே பல்வேறு சந்தர்ப்பங்களில் உரிய நேரத்திற்கு விலங்குகளுக்கு உணவு கிடைக்காமை, விலங்குகளுக்கு இடப்படும் உணவுகளை வெளியிலிருந்து வரும் விலங்குகள் உட்கொள்ளல் காரணமாக பெரும்பாலான மிருகங்களுக்கு கிடைக்க வேண்டிய உணவின் அளவு கிடைக்காமை, சபாரி பூங்காவின் யானைகள் வலயம் மற்றும் உலக விலங்குகள் வலயம் ஆகிய இரு வலயங்களினதும் விலங்குகளுக்காக கட்டளையிடப்பட்ட உணவின் அளவானது வழங்குநர்களால் விநியோகிக்கப்படாமையால் விலங்குகளுக்கு போதுமான அளவான உணவு கிடைத்திராமை, பற்றாக்குறையான உணவின் அளவினை பூர்த்தி செய்வதற்கான நடைமுறையொன்று இல்லாதிருந்தமை, யானைகளுக்காக வழங்கப்படுகின்ற உணவு அவற்றின் நிறையிலான வேறுபாட்டிற்கமைய மாற்றப்பட வேண்டிய போதிலும், நிறையினை அளவிடல் இடம்பெற்றிருக்காமை ஆகியன அவதானிக்கப்பட்டன.

விலங்குகளின் சுகாதாரம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்களின் போது விலங்குகளுக்கான தொற்றொதுக்க வசதிகள் இல்லாதிருத்தல், 2016 மற்றும் 2017 ஆகிய இரண்டு வருடங்களினுள் தேசிய மிருகக்காட்சி சாலைகள் திணைக்களத்திற்குரிய மிருகக்காட்சி சாலைகளில் 328 விலங்குகள் நோய் மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் மரணமடைந்திருந்தமை, விலங்குகளை ஓரிடத்திலிருந்து மற்றுமொரு இடத்திற்கு மாற்றும் போது கால்நடை மருத்துவரின் ஆலோசனைக்கமைய செயற்பட்டிராத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை, பிடி யானைகள் மற்றும் களிற்று யானைகளுக்கு சிகிச்சைகளை வழங்கும் போது அந்த சிகிச்சைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றிராமை, விலங்குகளுக்கு இலகுவாக சிகிச்சையளிப்பதற்காக விலங்குகளின் நெறிவழியொன்று (Crush) இல்லாதிருந்தமை போன்றே விடயங்கள் அவதானிக்கப்பட்டன. விலங்குகளின் இயற்கையான நடத்தைக் கோலங்களை காட்சிப்படுத்தக்கூடிய வகையில் வாழிடமொன்று நிர்மாணிக்கப்பட வேண்டிய போதிலும், தெஹிவளை மிருகக்காட்சி சாலையின் சில விலங்குகளுக்கு போதிய இடவசதி இல்லாதிருந்தமை, போதியளவான நிகழ்தல் முகாமைத்துவமொன்று இல்லாதிருந்தமை ஆகிய விடயங்கள் அவதானிக்கப்பட்டன. அதற்கு மேலதிகமாக சில விலங்குகள் தமக்கான துணை விலங்குகளின்றி உள்ள சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

மேற்படி அவதானிப்புக்களுக்கு மேலதிமாக தெஹிவளை மிருகக்காட்சி சாலை, பின்னவல யானைகள் சரணாலயம் ஆகிய மிருகக்காட்சி சாலைகளில் கழிவு நீர் உரிய முறையில் அகற்றப்பட்டிராமை, பின்னவல யானைகள் சரணாலயத்தின் யானைகளின் மலம் மற்றும் அகற்றப்படும் கழிவுகள் குறித்த சூழலில் குவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. தெஹிவளை மிருகக்காட்சி சாலையின் பெரும் எண்ணிக்கையிலான கூண்டுகள் இற்றுப் போயிருந்ததுடன், அன்றாடம் மாற்றீடுகள் இடப்பட்டு நடாத்திச் செல்லப்படுவதாகவும், போதியளவான பாதுகாப்பு கிடைப்பதில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே

பின்னவல யானைகள் சரணாலயத்தின் நீதிமன்ற கட்டளையின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 18 யானைகள் தொடர்பில் எழுந்துள்ள விலங்கு மற்றும் ஊழியர் நலன்புரி பிரச்சினைகளும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

ஊழியர் நலனோம்பல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளின் மிருகக்காட்சி சாலைகளால் ஈட்டப்படும் மொத்த வருமானத்தில் மூன்று சதவீதத்திற்கு குறைவான அளவானது ஊழியர்களுக்காக செலவிடப்பட்டிருந்தமை, விலங்குகளுக்கு சிகிச்சையளிக்கும் சந்தர்ப்பங்களில் அவற்றை தடுத்து வைப்பதற்கான நெரிவழியொன்று (Crush) இல்லாதிருந்தமையின் காரணத்தால் ஊழியர்கள் விபத்துக்களுக்கு உள்ளாகக்கூடிய சந்தர்ப்பங்கள் நிலவுகின்றமை, அவ்வாறான விபத்துக்களுக்காக போதியளவான காப்பீடொன்று இல்லாதிருந்தமை, உரிய முறையில் பயிற்சிகள் வழங்கப்பட்டிராமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

மேற்படி நிலைமைக்கான தீர்வொன்றாக மிருகக்காட்சி சாலைகள் திணைக்களத்திற்கு சொந்தமான மிருகக்காட்சிசாலைகளிற்காக விலங்குகளினதும் ஊழியர்களினதும் அனைத்து நலனோம்பல் நடவடிக்கைகளும் உள்ளடங்கும் வகையில் விரிவான மற்றும் திட்டவட்டமான வழிகாட்டிக் கோவையொன்று தயாரிக்கப்பட்டு நாளதுவரையாக பேணிச் செல்லல், துணைகளற்ற விலங்குகளுக்காக துணைகளை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல், ஊழியர்களுக்கு மிகவும் செயற்திறனான மற்றும் ஆக்கபூர்வமான முறையில் தமது சேவைகளை பேணிச்செல்ல இயலக்கூடிய வகையில் பயிற்சிகளை வழங்குதல், உரிய காலத்திற்கு ஒரு தடவை மருத்துவ முகாம்களை நடாத்துதல், போதுமான காப்பீடொன்றை வழங்குவதன் மூலம் அவர்களின் சேவையின் வினைதிறனை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் 2017 ஆம் ஆண்டில் ரூபா 999 மில்லியன் அளவான வருமானம் ஈட்டியிருந்ததுடன், இந்த வருமானத்தில் விலங்குகளின் உணவு மற்றும் மருந்துப் பொருட்களுக்காக 27 சதவீதமும், ஊழியர் நலனோம்பல் மற்றும் மருந்துப்பொருட்களுக்காக 2.56 சதவீதமும், நிர்மாணங்களுக்காக 16 சதவீதமும் செலவிடப்பட்டிருந்தது. மிருகக்காட்சி சாலைகள் திணைக்களம் தமது வருமானத்தில் முழுமையாக உழைப்பது விலங்குகளை காட்சிப்படுத்துவதனால் என்பதால் இனங்காணப்பட்ட அவதானிப்புக்கள் தொடர்பில் கவனம் செலுத்தி விலங்குகளின் நலனோம்பல் மற்றும் ஊழியர் நலனோம்பல் தொடர்பில் மேலும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என முடிவுரை காணப்படுகின்றது.

## 02. அறிமுகம்

### 2.1 பிண்ணனி

### 2.1.1 மிருகக்காட்சி சாலைகளின் வரலாறு

------------------------------------------------------------------

இலங்கையில் பிடிக்கப்படும் காட்டு விலங்குகளை மிருகக்காட்சி சாலைகளுக்கு கொண்டு செல்லும் வரை தடுத்து வைத்திருப்பதற்காக தெஹிவளை பிரதேசத்தில் 11 ஏக்கர்கள் பரப்பளவான நிலப்பிரதேசத்தில் ஜோன் ஹாகென்பேர்க்சினால் 1920 ஆம் நூற்றாண்டில் முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட மிருகங்களை சேகரிக்கும் நிலையம் "Ceylon Zoological Gardens Company" ஆக 1926 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டிருந்தது. 1936 யூலை 03 ஆந் திகதி இலங்கையை கட்டுப்பாட்டில் வைத்திருந்த பிரித்தானிய அரசிற்கு சுவீகரிக்கப்பட்ட இந்த நிறுவனம் "Ceylon Zoological Gardens" ஆக பெயரிடப்பட்டது.

மிருகக்காட்சி சாலையின் முதலாவது பணிப்பாளராக மேஜர் ஒப்ரோ என் வைமன் அவர்கள் நியமிக்கப்பட்டதுடன், 1954 - 1962 காலப்பகுதியில் அவரின் சேவைக்காலத்தினுள் விலங்குகளின் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தி ஆபிரிக்கா யானைகள், ரயினோசிரஸ், ஹிபபொடேமஸ், கொரில்லா, சிம்பன்ஸி உள்ளடங்கலான பல்வேறு வகையான வெளிநாட்டு விலங்குகளை மிருகக்காட்சி சாலைக்கு சேர்ப்பதன் மூலமும் மிருகக்காட்சி சாலையில் பூக்களை வளர்த்தும் நிலத்தை அழகுபடுத்தி அபிவிருத்தி செய்யப்பட்டது. "Ceylon Zoological Gardens" ஆக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த மிருகக்காட்சி சாலை 1962 ஆம் ஆண்டின் போது தேசிய மிருகக்காட்சி சாலைகள் திணைக்களமாக பெயரிடப்பட்டது. 1966 ஆம் ஆண்டின் போது உள்நாட்டு பறவைகள் பூங்கா, 1973 ஆம் ஆண்டின் போது மீன்களை உள்ளடக்கிய மின் மெதுர, 1981 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் முறையே சமனல உயன, ஊர்வன மற்றும் ஈருடக வாழிகளில் பிரிவொன்று மிருகக்காட்சி சாலைக்கு இணைக்கப்பட்டு காட்சிப்படுத்தல் பணிகள் மேம்படுத்தப்பட்டிருந்தன. 1962 - 1985 காலப்பகுதியினுள் "சுதந்திரமான விலங்குகளின் வாழிடம்" எண்ணக்கருவை அறிமுகப்படுத்தி சிங்கங்கள், கொரிலாக்கள், ஒரங்உட்டான், சிம்பன்சி மற்றும் கிபன் உள்ளடங்கலான விலங்குகளை காட்சிப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டது.

### 2.1.2 அண்மைக்கால போக்குகள்

தேசிய மிருகக்காட்சி சாலைத் திணைக்களம் தெஹிவளை மிருகக்காட்சிசாலை, பின்னவல யானைகள் சரணாலயம் ஆகிய செயற்பாட்டு அலகுகளுக்கு மேலதிகமான பின்னவல மிருகக்காட்சிசாலை, ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா, மற்றும் விலங்குணவுப் பண்ணை ஆகிய செயற்பாட்டு அலகுகளை கொண்டமைந்துள்ளதுடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக இந்த அனைத்து செயற்பாட்டு அலகுகளிலும் 4,902 விலங்குகள் காணப்பட்டன.

தெஹிவளை மிருகக்காட்சி சாலை 23 ஏக்கர்கள் பரப்பளவான நிலப்பிரதேசத்தை கொண்டுள்ளதுடன், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பாலூட்டிகள், பறவைகள், ஊர்வன மற்றும் மீன்கள் ஆகிய வகைகளுக்குரிய விலங்குகளின் எண்ணிக்கை 4232 ஆகும். வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 10 மணி வரை மிருகக்காட்சி சாலையின் ஒரு பகுதி பார்வையாளர்களுக்காக திறக்கப்பட்டுள்ளது.

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் 25 ஏக்கர்கள் பரப்பளவான நிலப்பிரதேசத்துடனான 1975 ஆம் ஆண்டின் போது பின்னவல, ரம்புக்கனயில் ஆரம்பிக்கப்பட்ட யானைகள் சரணாலயத்தினை தேசிய மிருகக்காட்சி சாலைகள் திணைக்களத்திற்கு சுவீகரிப்பதற்கு 1982 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டதுடன், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அதில் உள்ள யானைகளின் எண்ணிக்கை 85 ஆகும்.

தெஹிவளை மிருகக்காட்சி சாலையின் விலங்குகளுக்காக தரமான புதிய விலங்கு உணவுகளை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன், 1997 ஆம் ஆண்டின் போது கோனபொல பிரதேசத்தில் சுமார் 15 ஏக்கர்கள் பரப்பளவான காணியில் விலங்கு உணவுப் பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. விலங்குகளுக்காக மேற்கொள்ளப்பட்ட உணவு பயிர்ச்செய்கைகளுக்கு மேலதிகமாக இந்த பண்ணையினுள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மிகையான விலங்குகள் 93 ஆகும்.

பின்னவல யானைகள் சரணாலயத்தை பார்வையிடுவதற்கு வருகைதரும் பார்வையாளர்களை ஈர்ப்பதற்கான நோக்கில் 2008 யூன் 25 ஆந் திகதி பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னவல மிருகக்காட்சி சாலையின் நிலப்பிரதேசமானது 44 ஏக்கர்களாவதுடன் 2015 ஏப்ரல் 15 ஆந் திகதி பார்வையாளர்களுக்காக திறக்கப்பட்டிருந்தது. விலங்குகளுக்காக ஒதுக்கப்பட்ட கூடுகள் மற்றும் சிறிய இடங்களுக்காக சுதந்திரமாக வாழக்கூடிய சூழலொன்றை உருவாக்கும் நோக்குடன் தாபிக்கப்பட்ட மிருகக்காட்சிசாலையினுள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில்

உள்ளபடியான பாலூட்டிகள், பறவைகள், ஊர்வன மற்றும் மீனினங்கள் ஆகிய வகைகளுக்குரிய விலங்குகளின் எண்ணிக்கை 190 ஆகும்.

2008 திசெம்பர் 20 ஆந் திகதி நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட 500 ஏக்கர்கள் பரப்பளவான நிலப்பரப்புடனான ஹம்பாந்தோட்டை ரிதீகம சபாரி பூங்கா 2016 மார்ச் 28 ஆந் திகதி பார்வையாளர்களுக்காக திறந்து வைக்கப்பட்டது. மிருகக்காட்சி சாலையின் விலங்குகளின் பாதுகாப்பிற்காக தேவையான விலங்கு இனப்பெருக்க நிகழச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் மற்றும் சிறுத்தை போன்ற விலங்கினங்களுக்காக விசேட வலயத்துடன் தாபிக்கப்பட்ட பூங்கா புதிய சர்வதேச மிருகக்காட்சிசாலைகள் எண்ணக்கருவிற்கமைய விலங்கு வலயமாக உருவாக்கப்பட்டிருந்தது. பூங்காவின் விலங்குகள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பாலூட்டிகள், பறவைகள் மற்றும் ஊர்வன போன்ற வகைகளுக்குரிய விலங்குகளின் எண்ணிக்கை 302 ஆகும்.

### 2.1.3 சர்வதேச நியமங்களின் கீழ் நடாத்திச் செல்லல்

உலகின் பல்வேறு நாடுகளின் மிருகக்காட்சி சாலைகளின் பணிப்பாளர்களின் கூட்டிணைப்பொன்றாக 1946 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட மிருகக்காட்சிசாலைகள் மற்றும் நீர் வாழ்காட்சிசாலைகள் சங்கம் (WAZA) இன்றளவில் உலகின் பல்வேறு நாடுகளின் மிருகக்காட்சி சாலைகள் மற்றும் நீர்வாழ் காட்சிசாலைகள் 220 அங்கத்தவர்களை கொண்ட சங்கமொன்றாகும். உலக மிருகக்காட்சிசாலைகள் மற்றும் நீர்வாழ் காட்சிசாலைகள் சங்கம் அதன் உபவிதிகள் மற்றும் அந்த அமைப்பினால் தாபிக்கப்பட்ட நடத்தைப் பண்புகள் மற்றும் விலங்குகளின் நலன்புரி உள்ளடங்கலான ஏனைய அனைத்து சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்குவதற்கான விருப்பினை மிருகக்காட்சிசாலைகள், நீர்வாழ் காட்சிசாலைகள், தேசிய மற்றும் வலய ரீதியான சங்கங்கள், சமனான எண்ணமுடைய அமைப்புக்கள் மற்றும் நபர்களை ஒன்று சேர்க்கும் உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டதுடன் 1965 ஆம் ஆண்டின் போது இலங்கையும் இதன் அங்கத்துவத்தினை பெற்றிருந்தது.

### 2.1.4 விலங்குகளின் நலனோம்பல்

உலகின் ஏனைய நாடுகளால் விலங்குகளின் நலனோம்பலினை ஏற்படுத்தும் போது விலங்கொன்று சுகாதாரம் நிறைந்ததாக, சௌகரியத்துடன், மிகவும் உயரிய போஷாக்கு மட்டமொன்றினையும் பாதுகாப்பின் கீழ் தமது இயற்கையான நடத்தைப் பண்பினை வெளிப்படுத்தக்கூடிய வகையில், பயம் மற்றும் மன உளைச்சலின்றி வாழ்வதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்துதல் என வரைவிலக்கணப்படுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக நோய் மற்றும் பிணிகளை தடுத்தல், கால்நடை மருத்துவ சிகிச்சைகளை தேவைக்கேற்ப வழங்குதல், வாழிட முகாமைத்துவம், போசணை மற்றும் கருணையை விலங்குகளுக்கு வழங்குதலும் விலங்குகளின் நலன்புரியினுள் உள்ளடங்கும்.

### 2.1.5 ஊழியர் நலனோம்பல்

இந்த விலங்குகளுடன் பணியாற்றும் அனைத்து ஊழியர்களினதும், உத்தியோகத்தர்களினதும், விலங்குகளினால் ஏற்படக்கூடிய விபத்துக்கள் தொடர்பில் கிடைக்கக்கூடிய பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் உரிய வசதிகள் உரிய முறையில் வழங்குதல், ஊழியர் நலன்புரி என பொருள் கொள்ளப்படும். தேசிய மிருகக்காட்சி சாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2016 யூலை 08 ஆந் திகதிய DZG/Dev/1/5/Pro-2016 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தினால் பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்காக 1982 இன் 41 ஆம் இலக்க தேசிய மிருகக்காட்சிசாலைகள் அதிகாரச்சட்டத்தின் II ஆம் பிரிவின் 8 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள

மிருகக்காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலனோம்பு நிதியத்திற்கு அனைத்து மூலங்களிலிருந்து கிடைக்கும் நிதியங்களும் செலவு வைக்கப்படும்.

- விலங்குகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.
- விலங்குகளின் பாதுகாப்பிற்காக விலங்கு இனப்பெருக்க நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- விலங்குகளின் பாதுகாப்பு மற்றும் விலங்குகளுக்கு கருணை காட்டுதல் எனும் எண்ணக்கருவின் கீழ் விலங்குகள் தொடர்பான கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- விலங்குகளின் பாதுகாப்பு, இனப்பெருக்கம் தொடர்பான மற்றும் திணைக்களத்திற்குரிய ஏனைய பிரிவுகள் தொடர்பில் ஆராய்ச்சிகளை நடாத்துதல்.
- கருணை மற்றும் அரவணைப்பு தகவலை வழங்குவதனை நோக்காக கொண்ட விலங்குகளின் கண்காட்சி.
- பார்வையாளர்களை கவர்வதற்காக களியாட்ட வசதிகளை வழங்குதல்.
- விலங்கு இனப்பெருக்கம், விலங்குகளின் பாதுகாப்பு மற்றும் சிறந்த விலங்குகளின் சுகாதாரத்தினை பேணுவதற்காக கால்நடை மருத்துவத்தின் அரவணைப்பினை வழங்குதல்.
- போதியளவான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளை வழங்குதல்.
- நிர்வாக கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல்.
- தர முகாமைத்துவ நடைமுறையினை அறிமுகப்படுத்தல்.
- வருமானம் ஈட்டும் வழிகளை அபிவிருத்தி செய்தல்.
- பச்சை முகாமைத்துவ மார்க்கங்களை ஈடுபடுத்தல்.
- புதிய நிறுவனங்களை நிறுவுதல்.

### 2.1.6 மிருகக்காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலனோம்பு நிதியம்

2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான 5 வருட காலப்பகுதியினுள் மிருகக்காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்திற்கான காசு பெறுவனவு மற்றும் செலவினங்கள் பின்வருமாறு ஆகும்.

| உருப்படி | **2013** | **2014** | **2015** | **2016** | **2017** |
|---|---|---|---|---|---|
| வருமானம் (ரூபா) | 727,149,211 | 911,518,926 | 1,038,323,207 | 1,098,522,091 | 999,126,643 |
| விலங்கு உணவு செலவினம் (ரூபா) | 194,058,737 | 209,900,244 | 234,546,036 | 264,242,128 | 264,184,542 |
| விலங்கு உணவு வருமானம் % | **26.68** | **23.03** | **22.59** | **24.05** | **26.44** |
| விலங்கு மருந்துப்பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் செலவினம் (ரூபா) | 4,858,775 | 7,360,308 | 7,503,587 | 8,016,962 | 8,412,991 |
| வருமானத்தின் % | **0.67** | **0.81** | **0.72** | **0.73** | **0.84** |
| ஊழியர் நலன்புரி செலவினம் (ரூபா) (காப்புறுதி, மருந்து, ஊக்குவிப்பு படிகள்) | 16,036,778 | 19,880,650 | 22,502,273 | 24,598,287 | 25,604,195 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வருமானத்தின் % | **2.20** | **2.18** | **2.17** | **2.23** | **2.56** |
| ஊழியர் பயிற்றுவித்தல் செலவினம் (ரூபா) | 1,017,888 | 3,208,658 | 10,000 | - | 51,000 |
| வருமானத்தின் % | **0.14** | **0.35** | **0.001** | **0** | **0.005** |
| மிருகக்காட்சிசாலைகளை நிர்மாணிக்கும் செலவினம் (ரூபா) | 314,055,603 | 433,738,795 | 225,061,941 | 71,052,507 | 157,813,252 |
| வருமானத்தின் % | **43.18** | **47** | **22** | **6.4** | **16** |
| மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை கொள்வனவு செய்தல் | 8,810,000 | 26,653,741 | 18,143,030 | 42,157,798 | 29,027,920 |
| வருமானத்தின் % | 1.21 | 2.92 | 1.74 | 3.83 | 2.90 |
| ஏனைய செலவினம் | 89,397,761 | 97,879,468 | 112,736,982 | 176,433,970 | 157,694,920 |
| வருமானத்தின் % | 12.29 | 10.73 | 10.85 | 16.06 | 15.78 |
| மொத்த செலவினம் | **628,235,542** | **798,621,864** | **620,503,849** | **586,501,652** | **642,788,820** |
| மொத்த செலவினம் வருமானத்தின் % | **86.39** | **87.6** | **59.76** | **53.39** | **64.33** |

அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் கணக்குகளுக்கமைய பணிப்பாளர், மிருகக்காட்சிசாலைகளாக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மிருகக்காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தின் ரூபா 2,710,959,560 ஆன மீதியொன்று காணப்பட்டது.

**2.2 கணக்காய்விற்கான அதிகாரம்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (I) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 3(1) (ஈ), 5(2), 12(ஏ) பிரிவுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் இந்த செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

**2.3 கணக்காய்விற்கான தலைப்பினை தெரிவு செய்தமைக்கான காரணம்**

தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் வாழும் விலங்குகளின் பாதுகாப்பு, சுகாதார வசதிகள் மற்றும் ஏனைய தேவைப்பாடுகள் உரிய முறையில் வழங்கப்படுகின்றதா என்பது தொடர்பில் சமூகத்தினுள் ஏற்பட்டிருந்த பல்வேறு குற்றச்சாட்டுகளை உள்ளடக்கிய பேச்சுவார்த்தைகள் இந்த தலைப்பினை தெரிவு செய்வதற்கான காரணமாகும்.

**2.4 கணக்காய்வு நுழைவு**

**2.4.1 நிலவும் சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல்**

(அ) 1982 இன் 41 ஆம் இலக்க தேசிய மிருகக்காட்சிசாலைகள் அதிகாரச்சட்டத்தினை ஆராய்தல்.

(ஆ) மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல் மற்றும் விலங்குகளின் பராமரிப்பு தொடர்பில் திணைக்களத்தின் செயல்நடைமுறையினை பகுப்பாய்வு செய்தல்.

**2.4.2 சர்வதேச சட்டங்கள், விதிகள் மற்றும் நியமங்கள்**

உலக மிருகக்காட்சிசாலைகள் மற்றும் நீர்வாழ் காட்சிச்சாலைகள் சங்கம் (WAZA) நிறுவனத்தின் விலங்குகளின் நலன்புரி மற்றும் நடத்தைக் கோலங்களை ஆராய்தல்.

**2.4.3 மிருகக்காட்சிசாவையினால் பராமரிக்கப்படும் ஆவணங்கள், பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பரீட்சித்தல்.**

(அ) மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் செயலாற்றல் கோவையினை பகுப்பாய்வு செய்தல் மற்றும் பாய்ச்சல் குறிப்புகளை ஆராய்தல்.

(ஆ) 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அந்தந்த விலங்குப் பிரிவுகளால் விலங்குகளுக்காக பராமரிக்கப்படும் நாட்குறிப்பேடுகளை பரிசோதித்தல்.

**2.4.4 நேர்முகப் பரீட்சை**

**2.4.5 பௌதீகப் பரிசோதனைகள்**

**2.5 கணக்காய்வு நோக்கங்கள்**

இந்த கணக்காய்வின் நோக்கமாவது மிருகக்காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலனோம்பு நிதியம் விலங்குகளின் நலனோம்பலுக்காக பயன்படுத்தப்படுகின்றதா என்பது தொடர்பில் ஆராய்தல்.

**2.6 கணக்காய்வு கட்டளைவிதிகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் நியமங்கள் கவனத்திற்கொள்ளப்பட்டது.

(அ) 1982 இன் 41 ஆம் இலக்க தேசிய மிருகக்காட்சிசாலைகள் அதிகாரச்சட்டம்.

(ஆ) DZG/DRV/3/10/RO ஆம் இலக்க மற்றும் 2015 ஏப்ரல் 02 ஆந் திகதிய விலங்கினப் பிரிவிற்காக தயாரிக்கப்பட்ட செயல்வழிக் கோவை மற்றும் 2016 செப்தம்பர் 17 ஆந் திகதிய விலங்கினப் பிரிவிற்காக தயாரிக்கப்பட்ட செயல்வழிக்கோவை (பாய்ச்சல் படம்)

(இ) உலக மிருகக்காட்சிசாலைகள் மற்றும் நீர்வாழ் உயிரினக் காட்சிசாலைகள் சங்கம் (WAZA) மிருகக்காட்சிசாலைகள் தொடர்பில் பயன்படுத்தப்படும் நடத்தைக் கோலங்கள் கட்டமைப்பு மற்றும் விலங்குகளின் நலன்புரி உபாய மார்க்கங்கள்.

(ஈ) Murray E.Fowler and Susan K.Mikota's Biology,Medicine,and Surgery of Elephants-Chapter 05

(உ) 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் அதிகாரச்சட்டம்

**2.7 கணக்காய்வு விடயப்பரப்பு**

என்னால் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 3000- 3200) இணங்க எனது கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த செயலாற்றல் கணக்காய்வு தெஹிவளை மிருகக்காட்சிசாலை, பின்னவல யானைகள் சரணாலயம், வாகொல்ல மிருகக்காட்சிசாலை, ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா மற்றும் கோனபொல விலங்குப் பண்ணை ஆகிய இடங்களில் வாழும் மிருகங்களின் நலன் மற்றும் அந்த இடத்தில் பணியாற்றும் பதவியணியின் நலனை பரீட்சிப்பதற்காக வரையறுக்கப்பட்டது. இந்த அலகுகளின் விலங்குகளுக்கு உணவு மற்றும் நீரினை வழங்குதல், வாழிட முகாமைத்துவம், சுகாதார வசதிகள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவதுடன், 2016 ஆம் ஆண்டு முதல் 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் மிருகக்காகட்சிசாலைகள் திணைக்களத்தால் மேற்படி பணிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள விதம் தொடர்பில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

### 2.8 விடயப்பரப்பு மட்டுப்படுத்தப்படல்

நிதிக் கணக்காய்வின் போது மிருகக்காட்சிசாலையின் வருமானம் மற்றும் மூலதன செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பணிப்பொறுப்பு உள்ளடக்கப்படுவதால், அது தொடர்பில் இந்த கணக்காய்வின் போது ஆழமாக பரீட்சிக்கப்படவில்லை.

## 3. விரிவான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பரிந்துரைகள் மற்றும் நிறுவனத்தின் கருத்துரைகள்

### 3.1 மிருகக்காட்சிசாலைகள் அதிகாரச்சட்டம்

1982 இன் 41 ஆம் இலக்க தேசிய மிருகக்காட்சிசாலைகள் அதிகாரச்சட்டம், தேசிய மிருகக்காட்சிசாலைகளை நிர்வகித்தல் மற்றும் முகாமை செய்வததற்காகவும் மிருகக்காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தினை தாபிப்பதற்காகவும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதனோடு இணைந்த விடயங்களுக்காகவும் ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு நடைமுறைப்படுத்தபட்ட அதிகாரச்சட்டமாவதுடன், இந்த அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.1.1 விலங்குகளின் நலனோம்பல்

மிருகக்காட்சிசாலைகளில் வாழும் விலங்குகளின் நலனை பாதுகாத்தல் மிருகக்காட்சிசாலையொன்றின் பிரதான பணியாகும். எனினும், இந்த அதிகாரச்சட்டத்தில் எந்தவொரு இடத்திலும், ‘‘விலங்குகளின் நலன்புரி’’ என்பதை தெளிவான அர்த்தப்படுத்தியிருக்கவில்லை.

### 3.1.2 ஊழியர்களின் நலனோம்பல்

அதிகாரச்சட்டத்தின் 8.3(ஆ) ஆம் பிரிவின் கீழ் மிருகக்காட்சிசாலையின் ஊழியர்களுக்கு நலனோம்பல் மற்றும் ஊக்குவிப்பு முன்மொழிவு முறைகளை ஏற்படுத்துவதற்கு தேவையான அனைத்து பணமும் நிதி அமைச்சின் செயலாளரின் முன் அங்கீகாரத்தின் கீழ் செலுத்த முடியும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதிலும் ஊழியரின் நலன்புரி என்றால் என்ன என்பது தொடர்பில் தெளிவான விளக்கம் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.1.3 தேசிய மிருகக்காட்சிசாலைகள் அதிகாரச்சட்டம்

அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவன் கீழ் தேசிய மிருகக்காட்சிசாலைகள் என்பதற்கு ‘‘அரச நீர்வாழ் காட்சிசாலைகள், இரத்மலானையில் அமைந்துள்ள மிருகக்காட்சிசாலைகள் பண்ணை மற்றும் ரம்புக்கணை பின்னவலயில் அமைந்துள்ள யானைகள் சரணாலயம்’’ உள்ளடங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், தற்போது தெஹிவளை மிருகக்காட்சிசாலை மற்றும் பின்னவல யானைகள் சரணாலயம் ஆகியவற்றறை தவிர பின்னவல மிருகக்காட்சிசாலை (வாகொல்ல), ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா மற்றும் கோனபொலவில் அமைந்துள்ள விலங்குணவு பண்ணையும் மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படுகின்றமையால் மற்றும் இரத்மலான பண்ணை மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்திற்குரியதாக இல்லாதிருந்தமையால் ‘‘தேசிய விலங்குகள் பூங்கா’’ என திருத்தப்பட வேண்டும் என அவதானிக்கப்பட்டது.

### 3.1.4 மதியுரை செயற்குழுவொன்றினை நியமித்தல்

1982 இன் 41 ஆம் இலக்க தேசிய மிருகக்காட்சிசாலைகள் அதிகாரச்சட்டத்தின் III பிரிவிற்கமைய பணிப்பாளருக்கு அறிவுரை வழங்குதலின் மற்றும் அமைச்சருக்கு பரிந்துரை வழங்கும் பணிக்காக மதியுரை செயற்குழுவொன்று அமைச்சரினால் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மதியுரை செயற்குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.1.5 மதியுரைக் கோவை

உலக மிருகங்கள் மற்றும் நீர்வாழ் காட்சிசாலைகள் தொடர்பான சங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள நடத்தை விதிமுறைகள் மற்றும் விதிகளின் படி ஒவ்வொரு உறுப்பினரும் தமக்குரியவாறான வழிகாட்டிக் கோவையொன்றை தயாரிக்க வேண்டும். மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தினாலும் தற்போது வழிகாட்டிக் கோவையொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் அவசரமான சந்தர்ப்பமொன்றில் செயற்பட வேண்டிய நடைமுறை, விலங்குகளை கொண்டு செல்லும் போது செயற்பட வேண்டிய நடைமுறை, விலங்கொன்று ஏதேனுமொரு பணிக்காக பயிற்றுவிக்கப்பட்டால் அதன் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை, விலங்குகள் தொடர்பில் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நடைமுறை, மீன்கள் காட்சிசாலைகள் தொடர்பில் செயற்பட வேண்டிய நடைமுறை, ஊழியர்களுக்கு பயிற்சிகளை வழங்கக்கூடிய விதம் ஆகியவற்றை உள்ளடக்கி வழிகாட்டிக் கோவையொன்றை தயாரித்து பேணிச் செல்லல் மிருகக்காட்சிசாலையின் நோக்கங்களை மிகவும் செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் நடாத்திச் செல்ல உதவும் என அவதானிக்கப்பட்டது.

### 3.1.6 சுற்றாடல் தாக்கங்கள்

2017/2018 ஆண்டுகளுக்கான தெஹிவளை மிருகக்காட்சிசாலையை நடாத்திச்செல்வதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து 04459 (R4) ஆம் இலக்க சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அனுமதிப்பத்திரங்களின் நிபந்தனைகளின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) நீர் மாசடைதலை கட்டுப்படுத்துவதற்காக மிருகக்காட்சிசாலையிலிருந்து வெளியேற்றப்படும் மாசடைந்த நீரினை ஆகக் குறைந்தது நீரின இயலளவினை போன்று 8 மடங்கினை கொண்ட சுத்தமான நீரினை கொண்ட இடத்திற்கு அப்புறப்படுத்த வேண்டிய போதிலும், மிருகக்காட்சிசாலையினால் வெளியேற்றப்படும் நீர் கற் குழியொன்றுக்கு அப்புறப்படுத்தப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இவ்வாறு மாசடைந்த நீரினை தார்மீகமற்ற முறையில் அப்புறப்படுத்தல் சுற்றியுள்ள நீர் மூலங்கள் மாசடைவதற்கும் அண்டியுள்ள மக்களின் சுகாதாரத்திற்கு பாதகமான தாக்கமேற்படுத்த காரணமாக அமையலாம்.



(ஆ) 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி முதல் 2018 ஏப்ரல் 29 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய தெஹிவளை மிருகக்காட்சிசாலை தொடர்பில் வெளியிடப்பட்டிருந்த சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின் 2.3 ஆம் பிரிவின் பிரகாரம் அசுத்தமான நீரினை சுத்தமாக்கி வெளியேற்றுவதற்குரியதாக தகுதியுடைய மதியுரையாளர் ஒருவரினால் தயாரிக்கப்பட்ட செயற்திட்ட அறிக்கையொன்று அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு ஒரு மாதத்தினுள் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு வழங்கப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வு திகதியான 2018 யூன் 10 ஆந் திகதி வரையிலும் அவ்வாறானதொரு அறிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை. திண்மக் கழிவினை நீர் மூலங்களுக்கு சேர்வதற்கு இடமளிக்கப்படக்கூடாத போதிலும், மிருகக்காட்சிசாலையினால் பொருத்தமான அப்புறப்படுத்தல் நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) குப்பைகளை எரிக்கும் இடத்திலிருந்து வெளியேறும் வாயுக்களுக்காக உச்ச நியமங்கள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின்னால் வெளியிடப்பட்ட 04459 (R4) ஆம் இலக்க அனுமதிப்பத்திரத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த தரங்களிலிருந்தான விலகல்கள் நிலவுகின்றதா என்பது தொடர்பில் உறுதிப்படுத்திக்கொள்வதற்காக நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவதானிப்புகள் பின்வருமாறு.

I. உரிய வெப்பநிலையுடன் குப்பைகள் எரிக்கப்பட வேண்டும். இந்த எரிதொட்டிகளில் குப்பை கூழங்கள், காய்ந்த சறுகுகள், விலங்குகளின் இறந்த உடல்கள் போன்றன எரிக்கப்படுவதுடன், நாள்தோறும் எரிக்கப்படும் பொருட்களின் அளவு தொடர்பிலான தகவல்கள் மிருகக்காட்சிசாலையிடல் காணப்படவில்லை. எரிதொட்டிகளிலிருந்து வெளியேற்றப்படும் புகையிலுள்ள தனிமங்களை அளப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் அந்த புகையால் பார்வையாளர்களுக்கு, பிரதேசவாசிகளுக்கு, சூழலுக்கு ஏற்படும் பாதகமான தாக்கத்தினை மதிப்பிட முடியாதிருந்தது.

II. குப்பைக் கூழங்களை எரிக்கும் எரிதொட்டியிலிருந்து வெளியேற்றப்படும் புகை மிருகக்காட்சிசாலை மற்றும் அதனை சுழவுள்ள சுற்றாடலினுள் வியாபித்து காணப்படுவதாக அவதானிக்கப்பட்டதுடன், குப்பைகளை எரிப்பதனால் சமனல உயன புகையினால் சூழப்பட்டுள்ள விதம் 2017 நவம்பர் 17 ஆந் திகதி பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. புகை வண்ணத்துப்பூச்சிகளுக்கு அபாயமானது என்பது 2017 ஆகஸ்ட் 01 ஆந் திகதி 04 ஆம் பகுதியின் நாட்குறிப்பு புத்தகத்திலும் தெளிவாகின்றது.

III. சமனல உயனவில் கண்காட்சிக்காக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 12 சந்தர்ப்பங்களில் 20 வகைகளுக்கும் மேற்பட்ட 350 வண்ணத்துப்பூச்சிகள் லபுகம, கித்துள்கல, நாச்சிமலை மற்றும் அத்வல்தொட்ட ஆகிய பிரதேசங்களில் பிடிக்கப்பட்டிருந்ததாக நாட்குறிப்பு புத்தகத்தின் பதிவுகளுக்கமைய அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும் பிடித்து வரப்பட்ட வண்ணத்துப்பூச்சிகளை பெருக்கமடையச் செய்வதன் மூலம் மிருகக்காட்சிசாலையை அலங்கரிக்கும் நோக்கத்தினை நிறைவேற்றிக்கொள்ள புகை பிரதான தடையொன்று என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) பின்னவல யானைகள் சரணாலயத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள 12185(R2) ஆம் இலக்கமுடைய சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின் 2.1 ஆம் பிரவின் பிரகாரம் அசுத்தமான நீர் மற்றும் கழிவு நீர் மூலங்களும் அகற்றப்படாத போதிலும், யானைகள் சரணாலயத்தில் யானைகளின் தங்குமிடங்களை சுத்தம் செய்யும் போது அகற்றப்படும் நீரினை வடிகாண்களினூடாக திறந்த வெளிக்கு வெளியேற்றப்படுவதுடன், நீர் வடிந்தோடுவதற்கான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. யானைகள் சரணாலயத்திலிருந்து அகற்றப்படும் கழிவு நீர் யானைகள் சரணாலயத்தின் பின்புறமுள்ள ஆறு வரையிலும் வடிந்தோடுதல் நீர் மூலங்கள் மாசடைவதற்கான காரணமொன்றாகும்.



(உ) பின்னவல யானைகள் சரணாயத்திலிருந்து அப்புறப்படுத்தப்படும் கிளைகள், தென்னை ஓலைகள், கித்துள் மரக்கிளைகள் மற்றும் மரக்குற்றிகள், யானைகளின் மலம் போன்ற அனைத்து திண்மக்கழிவுகளும் சரணாலயத்தில் ஆங்காங்கே குவிக்கப்பட்டிருந்தது. அந்தக் கழிவுகள் கூட்டெருவாக்குவதற்கு அல்லது அகற்றுவதற்கான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.



**3.2 விலங்குகளின் நலனோம்பல்**

**3.2.1 தொற்றொதுக்கப் பணிகள்**

விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

(அ) உலக உயிரியல் பூங்காக்கள் மற்றும் நீர்வாழ் காட்சிசாலைகளுக்கான அமைப்பு (WAZA) இனால் வெளியிடப்பட்டுள்ள விலங்குகளின் நலனோம்பல் மற்றும் நெறிமுறைகளின் (ethic & Animal Welfare) 5 ஆம் பந்திக்கமைய விலங்குகளை ஒரு இடத்திலிருந்து மற்றுமொரு இடத்திற்கு கொண்டு செல்லும் போது அந்த விலங்கின் உணவு, சுகாதாரம், இனவிருத்தி தொடர்பான அறிக்கைகள், பிறப்பு தொடர்பான தகவல்கள், ஏனைய நடத்தையுடன் தொடர்புடைய தகவல்கள், ஏனைய நடத்தையுடன் தொடர்புடைய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட விரிவான அறிக்கையொன்றும் அனுப்பப்பட வேண்டியதுடன், அதனுடன் தகுதியுடைய உத்தியோகத்தர்களும் பங்குபற்ற வேண்டும். இது சர்வதேச பறிமாற்றமொன்றின் போது மாத்திரமல்லாது, ஒரு இடத்திலிருந்து மற்றுமொரு இடத்திற்கு விலங்குகள் பறிமாற்றும் போது முக்கியமானதாகும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது தெஹிவளை மிருகக்காட்சிசாலையிலிருந்து ஏனைய மிருகக்காட்சிசாலைகளுக்கு 29 விலங்குகள் பறிமாற்றப்பட்டுள்ளதாகவும், அதன் போது மேற்படி வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

ii. 2007 செப்தம்பர் 17 ஹம்பாந்தோட்டை சபாரி பூங்காவிலிருந்து இரண்டு பறக்கும் அணில்களை கொண்டு வந்து தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் 8 ஆம் பிரிவில் இடப்பட்டுள்ளது. அந்த விலங்குகளின் ஒன்று செப்தம்பர் 27 ஆம் திகதி மரணித்துள்ளதுடன், ஒக்தோபர் 28 ஆந் திகதி மற்றைய விலங்கு இறந்திருந்தது.

(ஆ) தெஹிவளை மிருகக்காட்சிசாலையின் விலங்குகள் ஒவ்வொரு பிரிவுகளின் (Section) கூண்டுகளுக்கு அடிக்கடி மாற்றப்படும் சந்தர்ப்பங்கள் காணப்படுவதுடன், இந்த மாற்றங்கள் தொடர்பில் கால்நடை மருத்துவ பிரிவிற்கு முன் அறிவித்தலின்றி மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. அதற்கமைய அவ்வாறு விலங்குகளை மாற்றும் போது உரிய அறிவித்தலின்றி மேற்கொள்ளப்பட்டமையால் சுகாதாரமான முறைகளை பின்பற்றுவதற்கு கால்நடை மருத்துவ பிரிவிற்கு தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கும் மேற்பார்வை செய்வதற்குமான சந்தர்ப்பம் இழக்கப்பட்டமை மற்றும் அறிவித்தலின்றி அவ்வாறு மாற்றப்பட்டமையால் விலங்குகளின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பதற்கும் அச்சுறுத்தலாகக் கூடுமென பின்வரும் அவதானிப்புகளினூடாக தெளிவாகின்றது.

(i) 2016 யூன் 15 ஆந் திகதி 12 ஆம் பிரிவிலிருந்து வெள்ளைக் அன்னங்கள் 3, 2 ஆம் பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளதுடன், 2 ஆம் பிரிவிலிருந்த 17 வாத்துகள் 5 ஆம் பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளது. இது தொடர்பில் உரிய கால்நடை மருத்துவரால் அறிந்திருக்கவில்லை என்பதால் பின்பற்றப்பட வேண்டிய சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பில் ஆலோசனை வழங்க முடியாதிருந்ததாகவும் நாட்குறிப்புப் புத்தகத்தின் மருத்துவரின் குறிப்புகள் மூலம் தெளிவாகின்றது.

(இ) பொது மக்களால் கொண்டு வந்து ஒப்படைக்கப்பட்ட மற்றும் சுற்றாடலில் சுதந்திரமாக இருந்தவற்றை பிடித்த விலங்குகளையும் பார்வைக்காக கூண்டுகளுக்கு இடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. இந்த விபரங்கள் தொடர்பில் வரலாற்று விபரமொன்று மிருகக்காட்சிசாலையில் இல்லாதிருந்தமையால், அந்த விலங்குகளை தனியானதொரு இடத்தில் வைத்து தொற்றொதுக்கம் மேற்கொள்ளப்பட்டு பிரச்சினையொன்றும் இல்லையெனின் மாத்திரம் மிருகக்காட்சிசாலைக்கு பொறுப்பேற்க வேண்டும். எவ்வாறெனினும், தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் அதற்கு பொருத்தமான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.2 விலங்குகளின் வாழிடங்கள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மிருகக்காட்சிசாலையால் வெளியிடப்பட்டுள்ள செயல்வழிக் கோவைக்கமைய விலங்குகள் வாழும் கூடுகள் மற்றும் வாழிடங்கள் நன்றாக சுத்தப்படுத்தப்பட வேண்டியதுடன், அது விலங்குகளின் நல்வாழ்வுக்கு காரணமாக அமையும். குகைளிலுள்ள விலங்குகளின் கூண்டுகள் உயர் அழுத்தத்துடனான இயந்திரமொன்றை பயன்படுத்தி கழுவ வேண்டியதுடன், வாழிடங்களில் புற்கள் வெட்டப்பட்டு சுத்திகரிக்கப்பட வேண்டும். அவ்வாறே மருத்துவர்களின் ஆலோசனைக்கமைய தரைக்கு புதிதாக மணல் இடப்பட வேண்டும். இந்த நிலைமைகள் மிருகக்காட்சிசாலையினுள் பேணப்படுகிறதா என்பது தொடர்பில் பரீட்சிக்கும் போது அதற்காக காட்டப்பட்டுள்ள அக்கறை போதுமானது அல்ல என்பது பின்வரும் விடயங்களுக்கமைய தெளிவாகின்றது.

I. 2016 சனவரி 01 ஆந் திகதி ரயினோக்களின் மலத்தினை உரிய முறையில் அகற்றாமையினால் அவை ஒரு இடத்தில் சேர்ந்திருந்தமையால் அவை உணவுடன் கலப்பதனால் உயிர்கொல்லி நோய் நிலமையொன்றுக்கு அந்த விலங்கு இரையாகியிருந்தது. கால்நடை மருத்துவரின் பரிந்துரைக்கமைய மலம் மற்றும் கழிவுகள் உரிய முறையில் சுத்தப்படுத்தப்பட வேண்டிய

போதிலும், விலங்கிற்கு பொறுப்பாளர் அடிக்கடி மாறுகின்றமையின் அடிப்படையில் உரிய முறையில் சுத்தப்படுத்தல் இடம்பெறுவதில்லை என கால்நடை மருத்துவரால் குறிப்பிடப்பட்டிருந்தது.

II. 2017 செப்தம்பர் 22 ஆந் திகதி கால்நடை மருத்துவரால் ரயினோ பெண் விலங்கின் மலம் ஒரு மாத காலமாக சேர்ந்துள்ளதாகவும், அவை உரிய முறையில் அகற்றப்படாமையால் விலங்குகளின் சுகாதரரம் தொடர்பிலும் அச்சுறுத்தலாக முடியுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

III. 2016 மே 22 ஆந் திகதி கரடிகளின் வாழிடம், சிம்பன்சிகளின் வாழிடம் ஆகியன உரிய முறையில் சுத்தமாக்கப்பட்டிருக்கவில்லை என்பது உதவிப் பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

IV. கிரேட்டா கூடுகள் விலங்குகள் வாழிடங்கள் மனங்கவரும் வகையில் தயாரிக்கப்பட்டிராததுடன், கூடுகள் இற்றுப் போயிருந்தன. நீர் பாத்திரங்களும் சுத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை என்பது 2017 நவம்பர் 16 ஆந் திகதி 2018 சனவரி 18 ஆந் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட தளப் பரிசோதனைகளின போது அவதானிக்கப்பட்டது.




V. காணக்கூடியதாக இருந்தது. 2017 திசெம்பர் 22, 30 மற்றும் 2018 சனவரி 19 ஆந் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனைகளின் போது சிங்கத் தீவிலுள்ள தடாகம், ஒரங் உட்டன் கூண்டுகளிலுள்ள நீர் நிறைந்த குழிகள் மற்றும் வளைய வாள் மீன் கூண்டினை சுற்றிமும் உள்ள தடாகங்கள் சுத்தப்படுத்தப்படாதிருந்ததுடன், சருகுகள் நிறைந்து நீர் நிறம் மங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.




VI. கரடிகளின் கூண்டின் அருகிலுள்ள சிறிய தடாகத்தில் சருகுகள் நிறைந்துள்ளதுடன், நுளம்பு குடம்பிகளும் இருந்ததாக 2018 சனவரி 12 ஆந் திகதி தளப் பரிசோதனையின பொது அவதானிக்கப்பட்டது. நீர் கலங்கியிருந்த தடாகங்கள் உரிய முறையில் சுத்தம் செய்யப்படாமையால் ஆகும். இவ்வாறு உரிய முறையில் சுத்தம் செய்யப்படாமையால் டெங்கு நுளம்புகளும் பெருகக்ககூடும்.



VII. மெக்கோ கிளிகள் உள்ள கூடுகளில் நீர்ப்பாசிகள் படிந்துள்ளதுடன், நீர் பாத்திரங்கள் பாசி படிந்துள்ளதாக 2017 நவம்பர் 15 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தளப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.





VIII 2017 ஆம் ஆண்டில் பறவைகள் கண்காட்சிக்குரிய நாட்குறிப்புப் புத்தகத்திற்கமைய கால்நடை மருத்துவரால் பெப்ரவரி 07 ஆந் திகதி பறவை கூண்டுகளின் நிலமையானது சுகாதாரத்திற்கு சிறந்ததல்ல என்பதும், கூண்டுகள் உரிய முறையில் சுத்தப்படுத்தப்படவில்லை என்பதும், பறவைகளின் கழிவுகள் உரிய முறையில் அகற்றப்படவில்லை எனவும் குறிப்பு எழுதப்பட்டிருந்தது.

**(ஆ) விலங்குகளின் இயல்பான நடத்தைக் கோலம் பாதுகாக்கப்படும் வகையில் விலங்குகளை கூண்டுகளில் இடம் அல்லது இடமொதுக்குதல் இடம்பெற வேண்டியதுடன், கண்காட்சிக்காக வழங்கப்பட்டுள்ள சூழலும் அதற்கு இசைவானதாக இருக்க வேண்டும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.**

I. மிருகக்காட்சி சாலைகள் மற்றும் நீர்வாழ் காட்சிசாலைகள் தொடர்பான சங்கத்தினால் தமது அங்கத்தவர்களால் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள் மற்றும் விலங்குகளின் நலனோன்பல் தொடர்பில் 2003 ஆம் ஆண்டின் போது வெளியிடப்பட்ட அறிக்கையின் 3 ஆம் பந்தி காட்டு விலங்குகளை காட்சிப்படுத்தும் நியமத்திற்கமைய காட்டு விலங்குகளை காட்சிப்படுத்தும்

கூண்டுகள் விலங்குகளுக்கு இயல்பான நடத்தைக் கோலத்தினை காட்சிப்படுத்துவதற்கு இயலக்கூடிய வகையில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், தெஹிவளை மிருகக்காட்சிசாலையின் மிருகங்களுக்காக அமைக்கப்பட்டுள்ள கூண்டுகளில் பெரும்பாலானவை விலங்குகளின் இயல்பான நடத்தைக்கு போதுமானவை அல்லது என்பது தளப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு.

| விலங்குப் பிரிவின் இலக்கம் | விலங்கின் பெயர் | விலங்குக்கான கூட்டின் அளவு (அடி) | | | விலங்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | *நீளம் (அடி)* | *அகலம் (அடி)* | *உயரம் (அடி)* | |
| --------------- | -------------------- | ------ | ------- | ------ | --------- |
| I 24 I | குவான்கோ | 50 | 30 | 08 | 04 |
| 01 . | ஆந்தை | 15 | 10 | 10 | 09 |

உலகளாவிய மிருகக்காட்சி சாலைகள் மற்றும் நீர்வாழ் காட்சி சாலைகள் தொடர்பான சங்கத்தினால் 2003 ஆம் ஆண்டின் போது அங்கத்தவர்களுக்காக வெளியிடப்பட்ட நெறிமுறை மற்றும் விலங்குகளின் நலனோன்புக் கோவையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கண்காட்சி நியமங்களின் (Exhibit Standards) பிரகாரம் விலங்குகளுக்கு இயல்பான நடத்தைக்கு தேவையான சூழலினை உருவாக்கி கொடுக்க வேண்டும். அதற்கமைய விலங்குகளுக்கு வாழ்வதற்குப் பொருத்தமான வாழிடமொன்றை போன்றே தமது வாழ்க்கையை திருப்தியாக கழிப்பதற்கு பொருத்தமானதொரு சூழல் காணப்படுதலும், உயிரியல் விஞ்ஞான தேவைப்பாடொன்றாகும். எவ்வாறெனினும், எம்மால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் 22 வகையான பாலூட்டி விலங்குகளுக்கும் 08 பறவைகளுக்கும் துணைகள் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.2.3 விலங்குகளின் பாதுகாப்பு மற்றும் பார்வையாளர்களின் பாதுகாப்பு

மிருகக்காட்சிசாலையை நடாத்திச் செல்லும் போது காணப்பட வேண்டிய அத்தியவசியமான காரணிகளான விலங்குகளின் பாதுகாப்பு மற்றும் பார்வையாளர்களின் பாதுகாப்பு தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு ஆகும்.

(அ) உலக மிருககாட்சிசாலைகள் மற்றும் நீர்வாழ் காட்சிசாலைகள் சங்கத்தினால் (World Association of Zoos and Aquariums) 2003 ஆம் ஆண்டின் போது முன்வைக்கப்பட்ட விலங்குகளின் நலனோன்பு மற்றும் நெறிமுறை தொடர்பான கோவையில் (WAZA Code of Ethics and Animal Welfare) 3 ஆம் பந்தியில் விலங்குகளை காட்சிப்படுத்துவதற்கான நியமத்தின் (Exhibit Standards) பிரகாரம் விலங்குகளின் பாதுகாப்பு ஏற்படுத்தப்படும் வகையில் விலங்குகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும் எவ்வாறெனினும் விலங்குகளை காட்சிப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டிருந்த கூண்டுகளின் இற்றுப்போயிருந்த பகுதிகள் மற்றும் விலங்குகளால் சேதமாக்கப்பட்ட இடங்கள் துரிதமாக திருத்தப்பட்டிராமையின் அடிப்படையில் 3 சந்தர்ப்பங்களில்

விலங்குகள் தொலைந்து போயிருந்தமையும், 5 சந்தர்ப்பங்களில் அவற்றை இரையாக கொள்ளும் விலங்குகளால் உட்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் மேலும் 6 சந்தர்ப்பங்களில் காயங்கள் ஏற்பட்டிருந்தன. அந்த காணாமல் போயிருந்த விலங்குகளுக்கு என்ன நடந்தது என்பதை புலப்படுத்துவற்கு திணைக்களம் இதுவரையிலும் தவறியிருந்தது.

(ஆ) கூண்டுகள் இற்றுப் போயிருந்தமை மற்றும் கூண்டுகளின் அருகே பொறுப்பாளர் காணப்படாமையால் விலங்குகளின் கூண்டுகளின் பாதுகாப்பு தொடர்பில் திருப்திகொள்ள முடியாததுடன், விலங்குகளை கூண்டை விட்டு வெளியே வந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. 2016 மார்ச் 18 ஆந் திகதி அணில் குரங்குகளின் கூட்டின் வலையொன்று கழன்றிருந்தமையால் கூட்டை விட்டு வெளியே வந்த பின் பிடிக்கப்பட்டிருந்தது. இந்த சந்தர்ப்பத்திலும், விலங்குகளுக்கு பொறுப்பானவர் கூண்டின் அருகில் இல்லாதிருந்ததுடன் மற்றொரு பிரிவின் ஊழியரால் விலங்கு வெளியேறியுள்ளமை அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) சிங்க தூபதயின் மதில் வெடித்துள்ளதாக 2017 நவம்பர் 17 ஆந் திகதிய பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட போதிலும், 2018 யூன் 09 ஆந் திகதி வரையிலும் அது திருத்தப்பட்டிருக்கவில்லை. இந்த மதிலில் சாய்ந்தவாறு பார்வையாளர்கள் சிங்கங்களை பார்வையிடல் பாதுகாப்பற்றதென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.



(ஈ) 2016 யூலை 8 ஆந் திகதி நாட்குறிப்புப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவிற்கமைய சுதந்திரமாகவுள்ள பறவைகளுக்கு பார்வையாளர்களால் இடையூறு ஏற்படுவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

### 3.2.4 விலங்குகளுக்கு உணவு மற்றும் நீரினை வழங்குதல்

மிருகக்காட்சி சாலையில் வாழும் மிருகங்களுக்கு போசாக்கான சத்துள்ள உணவு வேலையொன்றை வழங்க வேண்டும். அதற்கமைய, ஒவ்வொரு விலங்கிற்கும், அந்த விலங்கின் நிறை, வயது மற்றும் ஏனைய விசேட நிலமைகள் (உதாரணம் - கர்ப்பம் தரித்துள்ள, நோயுற்ற விலங்குகளை) இனங்காணப்பட்டு உணவுப் பட்டியலொன்று தகைமை வாய்ந்த கால்நடை மருத்துவர் ஒருவரால் தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறே அந்த உணவுப் பட்டியல் விலங்குகளில் ஏற்படும் மாற்றங்களுக்கமையவும் தேவையான சந்தர்ப்பங்களிலும் மாற்றப்பட வேண்டும். இது தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு ஆகும்.

(அ) கால்நடை மருத்துவரால் ஒவ்வொரு விலங்கிற்கும் கிட்டிய கிராம்களின் அளவிற்கு உணவு பரிந்துரைக்கப்பட்ட போதிலும், சமையற்காரரால் உணவு தயாரிக்கப்படல் தொடர்பான அவதானிப்புகளை மேற்கொள்ளும் போது உணவு நிறையிடப்படாது தமது அனுபவத்தின் அடிப்படையில் தேவையான காய்கறிகள், பழங்கள் மற்றும் இறைச்சி வகைகள் மாத்திரங்களில் இடப்பட்டு கூடுகளுக்கு அனுப்பப்படும். இதன் காரணமாக

மருத்துவரால் பரிந்துரை செய்யப்பட்ட உணவின் அளவு அந்த விலங்கிற்கு கிடைக்கின்றதா, இல்லையா என்பது தொடர்பில் அவதானிப்பை மேற்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) விலங்குகளுக்கு உணவு வழங்கும் போது இலகுவாக உண்பதற்கு இயலக்கூடிய வகையில் அந்த உணவுகள் வழங்கப்படாத சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

(I) ஒட்டகச்சிவிங்கிகளுக்கு மரக் கிளைகளை வழங்கும் போது உண்பதற்கு இலகுவான முறையில் உயரமான இடத்தில் தொங்கவிடப்பட வேண்டிய போதிலும், 2016 மே 24 ஆந் திகதிய புத்தகக் குறிப்பின் பிரகாரம் அவ்வாறு செய்யப்பட்டிக்கவில்லை என பதிவு செய்யப்பட்டிருந்தது. 2017 நவம்பர் 17 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தளப் பரிசோதனை மற்றும் 2017 நவம்பர் 21 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தளப் பரிசோதனையின் போது போது மரக் கிளைகள் விலங்குகளுக்கு உண்பதற்கு இலகுவான முறையில் தொங்கவிடப்பட்டிருக்கவில்லை.

(II) 2017 நவம்பர் 17 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தளப் பரிசோதனையின் போது கழுதைகளுக்கு உணவு வழங்கும் இடமும், அவற்றுக்கு உணவு உண்பதற்கு கிரமமான வகையில் உயர்வாக அமைக்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.





(இ) வழங்கல் பிரிவினால் வழங்கப்படும் உணவுகள் உரிய கூட்டின் எதிரே வைத்த பின் கூட்டிற்கு பொறுப்பானவர் அந்த கூட்டின் அருகே இல்லாதிருந்தமையால், அந்த உணவுகள் பார்வையாளர்களால் ஏனைய கூண்டுகளிலுள்ள விலங்குகளுக்கு வழங்க முற்படும் சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. இது 2016 செப்தெம்பர் 07 ஆந் திகதி இலக்கம் 17,18 ஆகிய பிரிவுகளின் நாட்குறிப்பு புத்தக பதிவுகளின் மூலம் தெளிவாகின்றது.

(ஈ) மிருகக்காட்சி சாலையின் செயல்வழிக் கோவைக்கமைய காலை உணவானது மு.ப 8.30 மணிக்கு முன்னர் வழங்கப்பட வேண்டிய போதிலும், அந்த நேரத்திற்கு உணவு வழங்கப்படாமை அடிக்கடி அவதானிக்கப்படுவதுடன், பெரும்பாலான விலங்குகளுக்கு காலை உணவானது மு.ப 9.00 மணிக்கும் மு.ப 9.30 மணிக்கும் இடைப்பட்ட காலத்தில் கிடைப்பதாக தளப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக விலங்குகளின் பொறுப்பாளராலும், இந்த உணவு தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும், தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் 5 ஆம் பிரிவின் விலங்குகளுக்கு தாமதமாக உணவு கிடைப்பதாக 2016 மே 24 ஆந் திகதிய நாட்குறிப்பு புத்தக பதிவுகளினூடாக சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் 2018

சனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் தாமதித்து உணவு வழங்கப்பட்டமை முறையே 09 நாட்கள், 15 மற்றும் 10 நாட்கள் அவதானிக்கப்பட்டதுடன், சமையலறையிலிருந்து கூடுகளுக்கு உணவினை கொண்டு செல்லல் முற்பகல் 8.30 மணிக்கு பின்னர் இடம்பெற்றுள்ளதாக தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது.

(உ) உரிய பகுதியினுள் விலங்குகளுக்கு பொறுப்பானவர்கள் இல்லாதிருந்தமையால் பார்வையாளர்களால் விலங்குகளுக்கு பல்வேறு உணவுகளை இடப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக விலங்குகளுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் உணவுகள் கிடைப்பதால் அந்த விலங்குகளின் உடல் நலத்திற்கும் போசனை மட்டத்திற்கும் பாதகமான முறையில் தாக்கம் ஏற்படக்கூடும். அது தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

I. நீர் யானைகளின் பிரிவின் விலங்குகள் பார்வையாளர்களிடமிருந்து உணவினை கேட்பதை வழக்கமாக கொண்டிருந்ததுடன், பார்வையாளர்களால் உணவு வழங்கப்படுகின்றது.



II. சிம்பன்சிகள், ஓரன் உடன் ஆகியவற்றுக்கு பார்வையாளர்களால் ஐஸ்கிறீட் மற்றும் ஏனைய உணவுகள் வழங்கப்படுதல்.

III. கரடிக் கூட்டிற்கு பார்வையாளர்களால் பலூன்கள் ஆகியவை இடப்பட்டுள்ளதுடன், கரடி அவற்றை சாப்பிட்டுள்ளதாகவும், மலத்துடன் அவை வெளியேறியுள்ளதாகவும், இது உயிராபத்து நிலைமை வரை அதிகரிக்கக்கூடும் என கால்நடை மருத்துவரால் 2016 ஒக்தோபர் 04 ஆந் திகதி நாட்குறிப்பு புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தில் மிருகக்காட்சி சாலைகளின் விலங்குகளுக்கு தேவையான உணவுகளை பெற்றுக்கொள்வதற்கான வழங்குனர்களை தெரிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்படும் விலைக்கேள்வி ஆவணங்களுக்கமைய பலா இலைகள் மற்றும் கலவையான கிளைகளை விநியோகிக்கும் போது உலர்ந்த மற்றும் பழுத்த இலைகள் அல்லாத புதிய கிளைகள் தண்டின் அளவானது 01 அடியை விட விசாலமாக இருக்கக்கூடாது என குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், இபல் குச்சிகளின் அளவானது 1 ½ - 2 ஆன பலாக் கிளைகள் மற்றும் கலவையான கிளைகள் விநியோகிக்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. இதன் போது அந்த இலைக்கட்டுக்கள் விலங்குகளுக்கு உட்கொள்ள இலகுவான முறையில் தொங்கவிடுவதற்கான சில கொக்கிகள் மாத்திரம் காணப்பட வேண்டிய போதிலும், அதனை விட அதிகளவு எண்ணிக்கையானவை காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. மேலும், பலா இலைகள் ஒவ்வொரு விலங்குப் பிரிவுகளுக்கும் கொண்டு செல்லல் மற்றும் நிறையினை அளப்பதற்காக தராசுகளில் இடுவதற்காக வழங்குனர்களால் கட்டுகளாக்கும் போது கட்டுகளுக்கு இடை நடுவில் இலைகளற்ற

பலாக்கிளைகள் வைக்கப்பட்டிருந்ததாக 2018 ஏப்ரல் 05 மற்றும் 24 ஆந் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட தளப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது. இதனூடாக விலங்குப் பிரிவிற்கு வழங்கப்படக் கூடிய உணவின் அளவில் பெரும் பகுதி கிளைகளின் பாரத்திற்காக ஒதுக்கப்படுகின்றமையால், விலங்குகளுக்கு தேவையான உணவின் அளவானது கிடைக்காமை மற்றும் பெருந்தொகையான உணவின் அளவானது கிடைக்காமை மற்றும் பெருந்தொகையான பணம் தரமற்ற பலாக்கிளைகளுக்கு செலுத்த நேர்ந்துள்ளதாக அவதானிக்கப்பட்டது. பலா கிளைகளை அளக்கும் சந்தர்ப்பத்திற்காக களஞ்சியப் பிரிவின் உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் போசனைப் பிரிவின் உத்தியோகத்தர் ஒருவர் பங்குபற்றியிருந்ததாக தளப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.





(எ) தேசிய மிருகக்காட்சி சாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2016 செப்தெம்பர் 17 ஆந் திகதிய விலங்குகள் பிரிவிற்காக தயாரிக்கப்பட்ட செயல்வழிக் கோவையின் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அசைபோடும் விலங்குகளுக்கு (Ruminants) உணவினை வழங்குதல் பி.ப 3.30 இன் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. விலங்குகளுக்கு உணவுக்காக இலைகள் மற்றும் கிளைகளை பகிர்ந்தளிக்கும் போது அதற்கடுத்த நாள் காலை உணவுக்காக விலங்குகளுக்குபொறுப்பானவர் கிளைகள் மற்றும் புற்களின் ஒரு பகுதி வீதியின் இருபுறமும் எடுத்து வைத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அந்த மரக்கிளைகள் அதற்கடுத்த நாள் விலங்குகளுக்கு உணவிற்காக வழங்கப்படும் வரையிலும் பாதுகாப்பானதாகவும் சுத்தமாகவும் வைத்திருப்பதற்கான பொருத்தமான வேலைத்திட்டமொன்று முகாமைத்துவத்தினால் தயாரிக்கப்பட்டிராமையால், விலங்குகளுக்கு புதிய, சுத்தமான உணவு வேளையொன்றை பெற்றுக்கொடுப்பதற்கான சந்தர்ப்பம் தவறவிடப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(ஏ) உணவினை போன்று நீரும் விலங்குகளின் பிரதான தேவைப்பாட்டினுள் உள்ளடங்கும். எவ்வாறெனினும், இந்த விலங்குகளுக்கு தேவையான நீர் கிடைக்காத சந்தர்ப்பங்களும் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு.

I. 15 ஆம் பிரிவின் விலங்கொன்று நீர் இன்றி உடல் வளர்ச்சியற்ற நிலைக்குள்ளாகி மரணமடைந்துள்ளதாக கால்நடை மருத்துவரால் 2017 செப்தெம்பர் 17 ஆந் திகதிய குறிப்பொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. குட்டிகளின் பகுதிக்காக போதியளவான நீர் வழங்கப்படுவதில்லை என்பதும் பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

II. 05 ஆம் இலக்கப் பிரிவின் வெளிநாட்டு பறவைகள் பூங்காவிலிருந்த கொண்டை கிளிகள் (Cocktial) இரண்டு மனஉளைச்சல் மற்றும் நீர் வற்றியமையால்

மரணித்துள்ளதாக கால்நடை மருத்துவரால் 2016 யூலை 08 ஆந் திகதி குறிப்புக்களின் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது.

(ஐ) 1995 இன் 35 ஆம் இலக்க அளவீட்டு அலகுகள் நியமம் மற்றும் சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 37 ஆம் பிரிவின் கீழ் அளக்கும் அல்லது நிறுத்தும் உபகரணங்களின் சரியான தன்மை பன்னிரெண்டு மாத காலப்பகுதியினுள் பரிசோதகர் ஒருவரால் சான்றுப்படுத்தப்பட வேண்டிய போதிலும், தேசிய மிருகக்காட்சி சாலைகள் திணைக்களத்திற்குரிய பின்னவல யானைகள் சரணாலயம் பயன்படுத்தப்படும் வட்டமுள் தராசுகள் இரண்டினதும் சரியான தன்மை 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.2.5 விலங்குகளின் சுகாதாரம்

மிருகக்காட்சி சாலையினுள் வாழும் விலங்குகளின் சுகாதாரம் தொடர்பில் கால்நடை மருத்துவர்களால் நாள்தோறும் பரீட்சிக்கப்பட்டு, உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டு சுகாதாரம் நிறைந்த விலங்குகளின் தொகுதியொன்றை வைத்திருப்பதற்கு செயற்பட வேண்டும். மிருகக்காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலனோன்பு நிதியத்தினால் 2013 முதல் 2017 வரையான 5 வருடங்களினுள் விலங்குகளின் மருத்துவப்பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்காக செலவிடப்பட்டிருந்த செலவினம் தொடர்பான விபரங்கள் கீழே காணப்படுவதுடன், மிருகக்காட்சிசாலையில் வாழும் விலங்குகளின் ஆரோக்கியம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **ஆண்டு** | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| **வருமானம் (ரூபா)** | 727,149,211 | 911,518,926 | 1,038,323,207 | 1,098,522,091 | 999,126,643 |
| **விலங்கு மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் செலவினம் (ரூபா)** | 4,858,775 | 7,360,308 | 7,503,587 | 8,016,962 | 8,412,991 |
| **வருமானத்தின் %** | **0.67** | **0.81** | **0.72** | **0.73** | **0.84** |

(அ) தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையின் தொகுதி 23 (Section 23) குட்டிகளுக்கான விரிவாக இனங்காணப்படுவதுடன், விலங்குகளுக்கு சிகிச்சையளிக்கும் கட்டிடத்தின் எஞ்சிய பகுதி குட்டிகளுக்கான விரிவாக ஒதுக்கப்பட்டிருந்தது. குட்டிகின் பிரிவினுள் பறவைகளின் முட்டைகளை அடைகாத்து குஞ்சுகளை பெற்றுக்கொள்வதற்காக இரு உபகரணங்கள் காணப்படுவதுடன், அந்த உபகரணங்களின் மூலம் அடைகாத்து பெற்றுக்கொள்ளப்படும் குஞ்சுகள் போஷிக்கப்பட்டு காட்சிக்கான விலங்குகளின் கூடுகளுக்கு விடுவிக்கப்படல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. தாயினால் புறக்கணிக்கப்படும் குஞ்சுகள், தாய் மரணமடைந்த குஞ்சுகள் மற்றும் வெளித்தரப்பினரால் வழங்கப்படும் விலங்குகளின் குட்டிகள் இந்த பிரிவினுள் போஷித்தல் இடம்பெறுகின்றது. எவ்வாறெனினும், இரவு பகலாக தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட வேண்டிய இந்த பிரிவின் பயிற்சி ஊழியர்களின் ஒரு தொகுதியினர் சேவையாற்ற வேண்டிய போதிலும், முறையான பயிற்சியொன்றினை பெற்றிராத ஊழியர்களின் ஒரு தொகுதியினர் சேவையாற்றியதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) விலங்குகளுக்கு சிகிச்சையளிக்கும் போது கால்நடை மருத்துவரால் விலங்குகள் நெருக்கமாக பரீட்சிக்கப்பட்டு உரிய சிகிச்சைகளை வழங்குவதற்காக விலங்குகளை

கூடுகளில் அடைக்கப்பட வேண்டும். தேவையான சந்தர்ப்பத்தில் விலங்கை இலகுவாக கூட்டில் அடைப்பதற்காக நெறிவழியொன்று (crush) தேவையாக உள்ளதுடன், அதனை தயாரித்து விலங்கினை அதனூடாக செல்வதற்கு அது சாதாரமாக அமைக்கப்பட்ட வேண்டும். அதன் பின்னர் கால்நடை மருத்துவர்களுக்கு தேவையான சந்தர்ப்பங்களில் விலங்குகளை கூடுகளில் அடைத்து இலகுவாக சிகிச்சையளிக்க முடியும். எனினும், மிருகக்காட்சி சாலைகளின் திணைக்களத்திற்கு சொந்தமான மிருகக்காட்சி சாலைகளில் வகிக்கும் பெரும்பாலான மிருகங்களுக்கு அவ்வாறான நெறிவழியொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. பொறி வைத்தல் தொடர்பில் பின்வரும் சிக்கல்கள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

I. காட்டுக் குதிரைகள், கிரேட்ட க்ரூட், குவான்கோ ஆகிய விலங்குகளுக்கான Crush நிர்மாணிக்கப்ட்டிராமை.

II. லெச்சே கூட்டின் பொறி நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அது அளவில் பெரியதாக இருந்தமையால் தேவைக்கு இணங்க இல்லாதிருந்தமை.

III. சேபல் என்டிலொப்பிற்காக பொறியொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அதனுள் செல்வதற்கு விலங்குகள் பயிற்றுவிக்கப்பட்டிருக்கவில்லை.

IV. விலங்கொன்று, நோய்வாய்ப்படும் போது சிகிச்சைகளுக்காக பொறியொன்றை நிர்மாணிக்க ஆரம்பிப்பதால் அதற்கான காலம் கடத்தப்படுகின்றமை மற்றும் விலங்கினை பழக்கப்படுத்த முடியாமை.

(இ) நோய்வாய்ப்பட்ட விலங்குகளுக்கு சிகிச்சையளித்தல், விலங்குகளுக்கு உண்ணி, மருந்து விசராதல் போன்ற பணிகளின் போது விலங்குகளுக்கு பாதுகாப்புடன் அந்த பணிகளை மேற்கொள்ள முடியாதிருந்தமையால் மற்றும் விலங்குகளின் மற்றும் பதவியணி உயிராபத்திற்கு உள்ளாகுதல், விலங்குகளுக்கு காயம் ஏற்படல் ஆகியன அவதானிக்கப்பட்டதுடன், அவ்வாறான பல சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

I. ரயினோ பெண் விலங்கு 2017 மே மாதம் நோயுற்றிருந்த சந்தர்ப்பத்தில் உரிய முறையிலான நெறிவழியொன்று இல்லாதிருந்தமையின் அடிப்படையில் உரிய சிகிச்சைகளை வழங்க முடியாதென அறிவிக்கப்பட்டுள்ளதுடன், காயத்திற்கு உரிய சிகிச்சை வழங்காமையால் காயம் பாரதூரமாக மாறும் அபாயம் ஏற்படக்கூடும் என கால்நடை மருத்துவரால் 2017 யூன் 03 ஆந் திகதி சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. இந்த மிருகம் வழமையாக பயணிக்கும் வீதியில் உரிய முறையில் புதிய கூண்டினை நிர்மாணிக்குமாறு யூன் 05 ஆந் திகதி கால்நடை மருத்துவரால் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அது யூன் 11 ஆந் திகதியே நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

II. 2017 சனவரி 3 ஆந் திகதி கபிலநிறக் கரடியை நன்றாக பரிசோதிப்பதற்கு நெறிவழியொன்று தேவையென கால்நடை மருத்துவர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அது சனவரி 9 ஆந் திகதி நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது. எனினும் அந்த விலங்கினை இதனுள் பிடிப்பதற்கு சிரமமாக உள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளதுடன், விலங்கு துடிப்பதனால் சிகிச்சையளித்தல் கடினம் என கால்நடை மருத்துவர் குறிப்பிட்டுள்ளார்.

III. பின்னவல மிருகக்காட்சிசாலையில் கழுதை, மான், போனி, சருகு மான் ஆகிய விலங்குகளுக்காக உரிய முறையில் தயாரிக்கப்பட்ட நெரிவழி இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், ஆண் கலைமானுக்காக

நிர்மாணிக்கப்பட்டிருந்த விலங்குக் கூண்டுகளில் நெறிவழியொன்று காணப்பட்ட போதிலும் அது நலிவான நிலையில் காணப்பட்டது.

IV. பின்னவல யானைகள் சரணாலயத்தில் வாழும் விலங்குகளுக்கு மருத்துவம் பார்ப்பதற்கு இலகுவாக மாற்றியமைக்கக்கூடிய நெறிவழியொன்று (Adjestable Crush) தேவையான போதிலும், அவ்வாறல்லாமையால் மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள் ஆபத்து ஏற்படுத்தக்கூடிய நோயுற்ற விலங்குகளுக்கு சிகிச்சை அளிப்பதாக அவதானிக்கப்பட்டது.

V. பறவைகளுக்கு சிகிச்சையளிப்பதற்கு, பூச்சி மருந்து வழங்குவதற்கு வாய் வழியாக மருந்துகளை வழங்குவதற்காக பறவைகளை பிடிப்பதற்கான வலையொன்று (Catcher) உரிய பிரிவில் இல்லாதிருந்தமையால் பறவைகளுக்காக உரிய நேரத்தில் திட்டமிடப்பட்டவாறு பூச்சி மருந்துகளை வழங்க முடியாதுள்ளதென கால்நடை மருத்துவர் 2017 ஆகஸ்ட் 25 ஆம் திகதி நாட்குறிப்புப் புத்தகத்தில் பதிவு செய்திருந்தார்.

(ஈ) தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான மிருகக்காட்சி சாலைகளில் வாழும் மிருகங்களின் 328 மிருகங்கள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளினுள் மரணமடைந்திருந்தன. நியுமோனியா, மனவுளைச்சல், விலங்குகளுக்கிடையிலான சண்டைகள், பிற விலங்குகளால் இறையாக்கப்பட்டிருந்தமை போன்ற காரணங்களின் அடிப்படையில் 77 விலங்குகள் மரணமடைந்திருந்ததுடன், இது ஒட்டு மொத்த இறப்புக்களின் எண்ணிக்கையில் 23 சதவீதமாகும்.

### 3.2.6 வாழிட முகாமைத்துவம்

இது தொடர்பிலான அவலதானிப்புக்கள் பின்வருமாறு.

(அ) எல்லா விலங்கிற்கும் வெயிலிலும் மழையிலும் பாதுகாப்பாக இருப்பதற்கான வாழிடமொன்றை மிருகக்காட்சிசாலையில் பெற்றுக்கொடுத்தல் உசிதமானதாகும். அது காட்டில் விலங்குகள் வெயில் மற்றும் மழையிலிருந்து காத்துக்கொள்வதற்கு தேவையான உபாயங்களை பயன்படுத்த முடியுமான போதிலும், மிருகக்காட்சிசாலையொன்றில் வாழும் விலங்குகளுக்கு அவ்வாறு செய்ய இயலாத காரணத்தால் அவற்றுக்கு மழையில் நனையாமல் இருக்கவும், வெயிலில் தேவையான நேரத்திற்கு பாதுகாப்பாக இருப்பதற்கு தேவையான வாழிட முகாமைத்துவம் மிருகக்காட்சிசாலையால் வழங்கப்பட வேண்டும். எனினும் அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களும் பின்வருமாறு அவதானிக்கப்பட்டன.

I. 17 ஆம் பிரிவின் கூரையில் தென்னை ஓலைகள் இற்றுப்போயிருந்ததுடன், மிருகக்காட்சிசாலையால் தென்னை ஓலைகளை தேடி அதனை வேய்வதற்கு நடவக்கை எடுக்காது, தற்காலிகமாக இறப்பர் சீட் அடிக்கப்பட்டிருந்ததாக 2017 யூலை 23 ஆம் திகதிய குறிப்பின் மூலம் தெளிவாகின்றது. அவ்வாறே 2017 திசெம்பர் 22 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போதும் இது உறுதிப்படுத்தப்பட்டது.

II. காயமடைந்துள்ள வோலப் மிருகத்தின் காயத்தை குணப்படுத்தல் கடினமானதெனவும், கூரை இல்லாதிருந்தமையால் குறைந்த பட்சம் உணவினையேனும் நனையாமல் கொடுக்க முடியாதெனவும், விலங்குப் பொறுப்பாளரால் பேணப்படும் நாட்குறிப்புப் புத்தகத்தின் மூலம் 2017 யூன் 23 ஆந் திகதி குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த மிருகம் நோயுற்று மரணமடைந்துள்ளதாக 2017 யூலை 8 ஆம் திகதிய குறிப்பிற்கமைய அவதானிக்கப்பட்டது.

III. 5 ஆம் பிரிவிலுள்ள விலங்குகளுக்கு சூரிய ஒளியிலிருந்து ஒதுங்கியிருப்பதற்கும், உணவு மற்றும் நீர் பாத்திரங்களை வைக்கும் இடங்கள் வெயில் மற்றும் மழையிலிருந்து பாதுகாக்கவும் வாழிடமொன்று இல்லாதிருப்பதாக கால்நடை மருத்துவராலும் 2016 யூலை 14 ஆந் திகதி குறிப்பிடப்பட்டிருந்தது.

IV. 5 ஆம் பிரிவிலுள்ள விலங்குகளின் உணவுப் பாத்திரங்கள் மழையினால் நனைந்து காணப்படுவதாகவும், பெசன்ட் விலங்குகளுக்கு மழையிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு வாழிடமொன்று இல்லாதிருப்பதாகவும் விலங்குகளுக்கான பொறுப்பாளரால் பேணப்படும் நாட்குறிப்பு புத்தகத்தினூடாக 2016 ஆகஸ்ட் 08 ஆந் திகதி குறிப்பிடப்பட்டிருந்தது.

V. ரயினோ அரணயில் விலங்குகளுக்காக வெயில் மற்றும் மழையிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு மழை மற்றும் வெயில் கவசமொன்று இல்லாதிருந்ததுடன், இது 2016 ஆகஸ்ட் 10 ஆம் திகதிய குறிப்பினூடாகவும் உறுதிப்படுத்தப்பட்டது.

VI. 2016 ஏப்ரல் 28 ஆந் திகதி பிறந்த 5 ஆம் பிரிவிலிருந்த இருவாயக்குருவிக் குஞ்சு இறந்திருந்ததாகவும் அந்த பறவை அதிகமாக நனைந்திருந்ததாகவும் 2016 மே 20 ஆந் திகதிய நாட்குறிப்புப் புத்தக குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) இரும்புக் குழாய்கள் மற்றும் வலைகளை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட தடுப்புக்களால் வேறாக்கப்பட்ட தனித்தனி நிலப்பிரதேசங்களினுள் பின்னவல மிருகக்காட்சிசாலையின் மான்கள் வாழிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. ஒரே இனத்தைச் சேர்ந்த கலைமான், கடமான், புள்ளிமான், மறை மற்றும் சருகுமான் ஆகிய 61 விலங்குகள் மான்கள் வாழிடத்தில் காட்சிப்படுத்தப்படுவதாக 2018 மே 15 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. இந்த மான்களின் வாழிடத்தில் வாழும் விலங்குகளுக்காக இயற்கையான மரங்களுடனான சூழலொன்று அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தது. விலங்குகளுக்கு மழையுடனான சந்தர்ப்பங்களில் ஒதுங்குவதற்காக இயற்கையான பொருட்களை கொண்டு வாழிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த விலங்குகளுக்கான வாழிடத்தினுள் நிர்மாணிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு கூண்டுகள் பகல் நேரங்களில் மூடப்பட்டிருக்கின்றமை அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக மழை நேரங்களில் மற்றும் விலங்குகளுக்கு பயம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் விலங்குகளுக்கு பாதுகாப்பு கூண்டுகளுக்கு செல்ல முடியாதென அவதானிக்கப்பட்டது. இதனடிப்படையில்,

I. காயமேற்பட்டுள்ள விலங்குகளின் காயங்களை காக்கைகள் கொத்துவதனால் குணமாவதற்கு நீண்ட காலம் எடுக்கின்றமை.

II. விலங்குகளின் உயிர்களுக்கு ஆபத்தாக அமைதல்.

III. நனைவதனால் நியுமோனியா ஏற்பட்டு 11 சருகு மான்கள் இறந்திருந்தமை.

### 3.2.7 விலங்குகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் ஆராய்சிகள்

உலக மிருகக்காட்சிசாலைகள் மற்றும் நீரியல் காட்சிக்கூட சங்கம் தமது அங்கத்தவர்களால் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள் மற்றம் விலங்குகளின் நலனோம்பல் தொடர்பில் 2003 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கையில் 9 ஆம் உப பிரிவின் பிரகாரம் மிருகக்காட்சிசாலைகளில் விலங்குகள் தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அந்த ஆராய்ச்சிகளின் பெறுபேறுகள் சங்கத்தின் அங்கத்தவர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். விலங்குகளை காட்சிப்படுத்தும் மாதிரியினை வடிவமைமத்தல்,

விலங்ககுளின் நடத்தை, முகாமைத்துவ பயன்பாடுகள், விலங்குகளின் போசணை, கால்நடை கட்டுப்பாடு, மருத்துவ நடைமுறைகள், விலங்குகளின் பிறப்பினை மேற்கொள்ளும் வழிமுறைகள் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதன் மூலம் விலங்குகளின் நலனோம்பலுக்காக அதிகளவான பங்களிப்பினை வழங்க முடியும் என குறிப்பிடப்பட்ருந்தது. தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த 2016-2020 வரையிலுமான 5 வருட அபிவிருத்தி திட்டத்தின் 3.3.4 ஆம் பந்திக்கமைய தெஹிவளை மற்றும் பின்னவல மிருகக்காட்சிசாலைகள், ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா, பின்னவல யானைகள் சரணாரயம் போன்ற மிருகக்காட்சிசாலைகளில் அந்த ஆராய்சிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆராய்சி நடவடிக்கைகளுக்கான அங்கீகாரம் மற்றும் உரிய ஆலோசனைகளை வழங்குவதற்கு முறையான ஆராய்சிக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் ஆராய்ச்சி பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2.8 யானைகளின் நலனோம்பு**

இது தொடர்பிலான அவதானிப்புகள் பின்வருமாறு ஆகும்.

(அ) திணைக்களத்திற்கு சொந்தமான தெஹிவளை மிருகக்காட்சிசாலை, பின்னவல யானைகள் சரணாலயம், ரிதியகம சபாரி பூங்கா ஆகிய செயற்பாட்டு அலகுகளில் யானைகள் காட்சிப்படுத்தப்படுவதுடன், நாரம்பெத்த தொற்றொதுக்க நிலையத்தில் நோய்வாய்ப்பட்ட யானைகளுக்கு சிகிச்சையளிக்கப்படுகின்றது. 2018 யூன் 01 ஆம் திகதியளவில் இந்த அனைத்து செயற்பாட்டு அலகுகளிலும் 109 யானைகள் இருப்பதாக அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு.

| **மிருகக்காட்சிசாலையின் பெயர்** | **யானைகளின் எண்ணிக்கை** | | |
|---|---|---|---|
| | **பெண் விலங்குகள்** | **ஆண் விலங்குகள்** | **மொத்த விலங்குகளின் எண்ணிக்கை** |
| தெஹிவளை | 06 | 01 | 07 |
| பின்னவல யானைகள் சரணாலயம் | 45 | 36 | 81 |
| சபாரி பூங்கா | 03 | 04 | 07 |
| நாரம்பெத்த தொற்றொதுக்க நிலையம் | | | 07 |
| கூட்டுத்தொகை | | | **102** |

(ஆ) ஹம்பாந்தோட்டை ரிதியகம சபாரி பூஹ்கா தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

I. 2017 ஆம் ஆண்டின் போது உலக விலங்குகள் வலயம், யானைகள் வலயம் எனும் விலங்கு வலயங்கள் இரண்டின் விலங்குகளுக்கான உணவு விநியோகத்தில் பற்றாக்குறையொன்று அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டின் திசெம்பர் 01 ஆந் திகதி முதல் 08 ஆந் திகதி வரையிலுமான காலப்பகுதியினுள் தொடர்ச்சியாக கட்டளையிடப்பட்ட ஒட்டுமொத்த உணவின் அளவானது 11,664 கிலோகிராம்களாக இருந்ததுடன், விநியோகிக்கப்பட்டிருந்த அளவானது 8,805 கிலோ கிராம்கள் ஆனமையால் குறைவாக விநியோகிக்கப்பட்ட அளவானது 2,859 கிலோ கிராம்கள் ஆகும். குறைவாக விநியோகித்த உணவின் அளவினை பெற்றுக்கொள்வதற்காக மாற்றுவழியொன்று பின்பற்றப்பட்டிராததுடன், விலங்குகளுக்கு குறைவான உணவினை வழங்குவதன் மூலம் தேவையான போசாக்கு கிடைக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

II. யானைகளுக்கு நாளாந்தம் உணவினை வழங்கும் போது கால்நடை மருத்துவரால் விலங்குகளின் போசாக்கு தேவைப்பாட்டிற்கமைய உணவுப் பட்டியல்கள்

தயாரிக்கப்பட்டு உணவு பெறப்படுவதுடன், அதற்காக வெளிவாரி வழங்குநர்கள் தெரிவு செய்யப்படுவர். உணவுப்பட்டியல் பதிவேட்டிற்கமைய நாளொன்றிற்கு 06 வகையான உணவுகள் கட்டளையிடப்படுவதுடன், அவ்வாறெனினும் கண்காய்வுப் பரிசோதனைக்கமைய நாளொன்றிற்கு பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உணவு வகைகளில் 5-2 வரையான அளவு விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. 2018 சனவரி முதல் ஏப்ரல் மாதம் வரையிலுமான 04 மாத காலப்பகுதியினுள் பட்டியலில் குறிப்பிடப்பட்ட உணவுகள் 75 நாட்கள் முதல் 22 நாட்கள் வரையிலும் விநியோகிக்கப்படாதிருந்தது. அதற்கமைய விலங்குகளுக்கு தேவையான போசணை மட்டம் கிடைப்பதாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை.

(இ) மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தில் யானைகள் அமைவிடமாக்கப்பட்டுள்ள பிரதான இடங்களாக பின்னவல யானைகள் சரணாலயம் இனங்காணப்படுவதுடன், தற்போது அதில் 88 எண்ணிக்கையான விலங்குகள் காணப்படுகின்றன. இங்கு யானைகளுக்கு உணவு வழங்குவதிலான சிக்கல்கள் பின்வருமாறு அவதானிக்கப்பட்டது.

I. மரே ஈ பவுலர் மற்றும் சுசான் கோ மிகோடாகே யானைகளின் உயிரியல் விஞ்ஞானம், மருத்துவம் மற்றும் அறுவைச் சிகிச்சை தொடர்பான நூலில் 5 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் யானைகளுக்கு உணவு வழங்கும் போது சிறுநீர் மற்றும் மலம் ஆகியவற்றுடன் கலக்காதவாறு உயரமான இடமொன்றில் வைக்க வேண்டும். அதே போன்று சாதாரணமாக யானையொன்றுக்கு அதன் நிறையின் 9 சதவீதத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் உணவு வழங்கப்பட வேண்டும். யானைகள் மடுவொன்றில் பல யானைகள் கட்டப்பட்டு உணவு நிறையிடப்படாது வழங்குதல் இடம்பெறுவதால் ஒவ்வொரு விலங்கிற்கும் தேவையான உணவின் அஅளவானது கிடைப்பதில்லலை என்பதும், உணவு சிறுநீர் மற்றும் மலம் ஆகியவற்றுடன் கலந்தும் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

II. மிருகக்காட்சிசாலையிலுள்ள யானைகளுக்கு உணவு வழங்கும் போது அவ்வாறு நிறைக்கமைய உணவு வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

III. நாளாந்த உணவினை பெற்றுக்கொள்ளும் போது சில மரக்கிளைகள் சில காலங்களில் அருமையாதல்.
அதிக வெப்பம் உள்ள காலங்களில் விலங்குகளின் உணவு உலர்ந்து போதல்.

IV. யானைகளுக்காக உணவு வழங்கும் போது அடிக்கடி அவற்றை வழங்குதல் பொருத்தமானதெனினும், 88 யானைகளுக்காக அவ்வாறு வழங்குவதற்கு போதியளவான ஊழியர்கள் இல்லாதிருந்தமையால் அவ்வாறு செய்யாமை.

**(ஈ)** மரே ஈ பவுலர் மற்றும் சுசான் கோ மிகோடாகே யானைகளின் உயிரியல் விஞ்ஞானம், மருத்துவம் மற்றும் அறுவைச் சிகிச்சை தொடர்பான நூலில் 5 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் சாதரணமாக யானையொன்றிற்கு நாளொன்றிற்கு சுமார் 200 லீட்டர் நீர் தேவைப்படுவதுடன், நீரினை குடிப்பதற்காக நிலமட்டத்திலிருந்து சுமார் 2 அடிகள் உயரத்தில் நீர் பாத்திரம் அமைக்கப்பட வேண்டும். அதே போல் அது ஒரே தடவையில் தும்பிக்கையை நிரப்பிக்கொள்ளக்கூடியவாறு சுமார் 7.6 லீட்டர்கள் கொள்ளலவினை கொண்டிருக்க வேண்டும். மேலும், அது 30 செக்கன்களில் தன்னியக்கமாக நிரம்பும் வகையில் அமைக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் வாழும் யானைகளுக்காக தயாரிக்கப்பட்டிருந்த தொட்டிகள் தன்னியக்கமாக நிரம்பும் வகையில் அமைக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) யானைகளின் சுகாதார நிலைமையை உரிய முறையில் பேணிச் செல்லல் மிகவும் முக்கிமானதுடன், அது தொடர்பான விபரங்கள் பின்வருமாறு ஆகும்.**

I. 2018 மே 16 ஆந் திகதியளவில் பின்னவல யானைகள் சரணாலயத்திலுள்ள யானைகளின் 5 இற்கு காச நோய் ஏற்பட்டிருந்த போதிலும், அந்த விலங்குகளை நார்ம்பெத்த நிலையத்திற்கு கொண்டு வருவதற்கான வசதிகள் இல்லாதிருந்தமையால் அந்த யானைகள் ஆரோக்கியமான யானைகளிடையே இருப்பதனால் மற்றைய விலங்குகளுக்கு நோய் பரவக்கூடிய அச்சுறுத்தல் நிலவியது.

II. நீதிமன்ற கட்டளையின் அடிப்படையில் வெளியிலிருந்து வரும் யானைகள் தொற்றொதுக்கம் செய்வதற்காக தொற்றொதுக்க நிலையத்தில் இடவசதி இல்லாதிருந்த காரணத்தால் அந்த யானைகள் மிருகக்காட்சிசாலையிலுள்ள யானைகளுடன் கலப்பததனால் மிருகக்காட்சிசாலைக்குரிய யானைகளுக்கு நோய்கள் தொற்றும் அச்சுறுத்தல் நிலவியது.

III. தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தினால் மிருகக்காட்சிசாலைக்குரிய யானைகளுக்கு சிகிச்சையளிப்பதற்காக சில சந்தர்ப்பங்களில் ஆயுர்வேத மருத்துவர் ஒருவரின் உதவி பெற்றுக்கொள்ளப்படுவதுடன், இந்த மருத்துவர் உரிய தினதிற்கு வருகைதராமை மற்றும் மருந்து க்டைக்காமையால் சிகிச்சைகள் இடையில் நிறுத்தப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், இது குறித்த விலங்கின் நிலவுகை தொடர்பில் பாதகமான முறையில் தாக்கமளித்துள்ளதாக அவதானிக்கப்படுகின்றது.

IV. தெஹிவளை மிருகக்காட்சிசாலையிலுள்ள யானைகள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒரே இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன், எம்மால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பந்துல யானை 2016 மற்றும் 2017 ஆகிய இரண்டு வருடங்களிலும், பேமா, தேவி, நாமலீ ஆகிய பிடி யானைகள் 2017 ஆம் ஆண்டிலும் பாதங்களில் நோய்களால் பீடிக்கப்பட்டிருந்தன. தெஹிவளை மிருகக்காட்சிசாலையிலுள்ள யானைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பாதங்களின் பாதுகாப்பு தொடடர்பில் உரிய நிகழ்ச்சித்திட்டங்கள் (Footcare Programmes) இல்லாதிருந்தமை அவததானிக்கப்பட்டது.

### 3.2.9 இயல்பான நடத்தைக் கோலம் மற்றும் சூழல்

இது தொடர்பிலான அவதானிப்புகள் பின்வருமாறு.

(அ) பின்னவல யானைகள் சரணாலயத்தின் யானைகளுக்கு சுததந்திரமாக இருப்பதற்கு சுமார் 15 ஏக்கர்கள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மதம் பிடித்த மற்றும் கீழ்ப்படியாத யானைகளை கட்டிவைத்திருந்தமையால் மற்றைய யானைகளுக்கு சுதந்திரமாக இருக்கக்கூடிய நிலப்பிரதேசம் சுமார் 9 ஏக்கர்கள் என்பது 2018 மே 16 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தளப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) பின்னவல யானைகள் சரணாலலயத்திலுள்ள யானைகளில் 19 யானைகள் நீதிமன்ற கட்டளையின் அடிப்படையில் தக்கவைக்கப்பட்டுள்ள யானைகளாகும். இந்த யானைகள் கீழ்ப்படியாத மற்றும் கடினப் போக்குடைய யானைகளானமையால் யானைகள் சரணாலயத்திலுள்ள யானைப் பாகன்களில் 77 இற்கு மேற்பட்டோரை இந்த யானைகளை பராமரிப்பதற்காக ஈடுபடுத்த நேர்ந்துள்ளது. இதன் காரணமாக பின்னவல யானைகள் சரணாலயத்திற்கு சொந்தமான யானைகளின் நலனோம்பலுக்காக முன்னுரிமை அளித்தல் குறைவடைந்த காரணத்தால் அந்த விலங்குகளின் சுகாதாரம், போசணை மற்றும் சுதந்திரம் தொடர்பில் அதன் மூலம் பாததகமான தாக்கமொன்று ஏற்படக்கூடும்.

(இ) பின்னவல யானைகள் சரணாலயத்தின் நிர்மாணங்கள் மற்றும் நீதிமன்ற கட்டளைகளினன் அடிப்படையில் தக்கவைக்கப்பட்டுள்ள யானைகளால் யானைகளுக்கு சுதந்திரமாக இருப்பதற்கான நிலப்பிரதேசம் வரையறுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே யானைக் கூட்டத்தில் சமாதானமாகவுள்ள யானைகளின் நடத்தைக் கோலங்கள் இதன் காரணமாக மாற்றமடைவதால் கலவரமாக செயற்பட்டு அடித்துக்கொள்ளல் இடம்பெற்றுள்ளது.

(ஈ) நீதிமன்றத்தினால் வழங்கப்படும் இவ்வாறான யானைகள் கீழ்ப்படிவற்ற வன்மையான யானைகளானமையால் உடற்பயிற்சிகளுக்காக நடப்பதற்கு, குளிப்பதற்காக ஆற்றுக்கு கொண்டு செல்வதற்கு முடியாதிருந்தமையால் இந்த விலங்கின் சுகாதாரத்திற்கு அதனூடாக பாதகமான தாக்கங்கள் ஏற்படக்கூடும். இவ்வாறே இந்த யானைகளுக்கு சுதந்திரமாக இருப்பதற்கான வாய்ப்புகள் வரையறுக்கப்படல், இனவிருத்திக்கான வாய்ப்புகள் கிடைக்காமை, ஒரே இடத்தில் நீண்ட காலமாக கட்டப்பட்டிருப்பதால் விலங்கு சித்திரவதையும் இடம்பெறுகின்றமை அவதானிக்கப்பட்டது.

**3.2.10 தெஹிவளை மிருகக்காட்சிசாலையை இரவு நேரங்களில் பார்வையாளர்களுக்காக திறந்து வைத்தல்**

பார்வையாளர்களுக்காக பகல் நேரங்களில் திறந்திருக்கும் மிருகக்காட்சிசாலையின் விலங்குப் பிரிவுகளில் ஒரு பகுதி இரவு 10 மணி வரை திறந்து வைத்திருத்தல் 2017 செப்தம்பர் மாதம் முதல் ஆரம்பிக்கப்டப்டிருந்தது. தெதஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலை இரவு நேரங்களில் திறப்பதன் மூலம் பின்வரும் நோக்கங்களை அடைந்கொள்ள எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

- பகல் நேரத்தில் வேலைப்பழுவுடனான பொது மக்களுக்கு இரவு நேரத்தில் ஓய்வு, களியாட்டத்தினை வழங்குதல் மூலம் மனவுளைச்சலை குறைத்துக்கொள்ளல்.
- இரவில் நடமாடும் விலங்குகளின் நடத்தைகளை அவதானித்தல்.
- வெளிநாட்டு பார்வையாளர்கள் மூலம் அந்நிய செலாவணியை ஈட்டுதல்.

இது தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

(அ) அனைத்து வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 10 மணி வரையிலும் மிருகக்காட்சிசாலை திறந்து வைக்கப்படுவதுடன், அவ்வாறு செய்வதற்காக அமைச்சின் அங்கீகாரம் அல்லது ஏனைய எழுத்துமூல அங்கீகாரமொன்று பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரவு காட்சி வழிகாட்டி வரைபடத்திற்கமைய மிருகக்காடட்சிசாலையின் 07 பிரிவுகளுக்குரிய வங்காளப் புலி, ஆபிரிக்கா சிங்கம், இலங்கை சிறுத்தை, கரடி, சந்தனப்புலி, யானை, மான், கடமான் உள்ளடங்களான 21 வகையான விலங்குகள், மீன் காட்சியகம், ஊர்வனப் பூங்கா மற்றும் நூதனசாலை காட்சிக்காக இரவு நேரங்களில் திறந்திருப்பதாக அவதானிக்கப்பட்டது.

(இ) இரவு நேரத்தில் மிருகக்காட்சிசாலையை வெளிச்சமூட்டுவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்த மின்குமிழ்கள் பார்வையாளர்களுக்கு ஒளியினை வழங்குவதற்கு பொருத்தமானதெனினும், அதன் மூலம் விலங்குகளின் வாழிடங்களுக்கு ஒளி பாய்ச்சப்படுகின்றமை மற்றும் மிருகக்காட்சிசாலையை பார்வையிடுவதற்காக வருகைதரும் பார்வையாளர்களுக்காக அறிவுரை கோவையொன்று வழங்கப்பட்டிருக்காமையால் இருளான இடங்களில் பதுங்கியுள்ள பிராணிகளை தேடி பிறப்பிக்கப்படும் மின் விளக்குகளின் ஒளி மற்றும் கையடக்கத் தொலைபேசிகளினால் விலங்குகளின் இயல்பான நடத்தைக்கு தடை ஏற்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) இரவு நேரத்தில் மிருகக்காட்சிசாலைக்கு வருகைதரும் பார்வையாளர்களுக்கு பார்வையிடக்கூடிய இடங்களை குறிப்பிட்டு வரைபடமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதனை அனைத்து பார்வையாளர்களுக்கும் வழங்குதல் மற்றும் பார்வையாளர்களை அறிவூட்டும் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிராமையால் மிருகக்காட்சிசாலையில் பார்வையிடக்கூடிய விலங்கினங்கள் தொடர்பில் அறிவினை பெற்றக்கொள்ளும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

(உ) இரவு நேரத்தில் பார்வையாளர்களுக்காக சட்டங்கள் மற்றும் விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டிராமை மற்றும் அதற்கு கீழ்ப்படியாதவர்களுக்காக வழங்கப்படக்கூடிய தண்டணைகள் தொடர்பில் குறிப்பிடப்பட்டிராமையால் பார்வையாளர்களால் விலங்குகளுக்கு இடையூறு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்மையும், அதனை தடுப்பதற்கு போதியளவான விலங்குப் பொறுப்பாளர்கள் ஒவ்வொரு விலங்குகளின் வாழிடத்திலும் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஊ) அவ்வாறே இரவு நேரத்தில் விலங்குகளின் பெயர்கள் பொறிக்கப்பட்ட பலகைகள் புலப்படாமை மற்றும் ஒவ்வொரு விலங்குகளின் வாழிடங்கள் தொடர்பிலும் பார்வையாளர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படாமையால் மிருகக்காட்சிசாலை பார்வையாளர்களுக்காக திறக்கப்பட்டமைக்கான நோக்கங்கள் நிறைவேறுவதில்லை என அவதானிக்கப்பட்டது.

(எ) மிருகக்காட்சிசாலையின் தொகுதி 08 இற்குரிய மிருகங்களான சருகு மான், மர அணில், செங்கீரி ஆகிய பிராணிகளை காட்சிப்படுத்தும் கூண்டுகளின் அருகே இரவு நேரத்தில் உலாவும் சிறுத்தை, சந்தன சிறுத்தை, நீர் நாய் போன்ற பிராணிகளின் கூண்டுகளும் அமைந்துள்ளன. இரவு பார்வையாளர்களுக்காக ஒழுங்கமைக்கப்பட்ட பாதையில் தீக்கோழி, வரிக்குதிரை மற்றும் குவானகோ ஆகிய விலங்குகள் உள்ளடங்கும் வகையில் அமைந்திருந்தமை மற்றும் இரவு காட்சிக்காக பயன்படுத்தப்படும் விலங்குகள் மற்றைய விலங்குகளிடமிருந்து வேறாக்கப்பட்டு காட்சிப்படுத்துவதற்கான நடைமுறைகள் தயாரிக்கப்பட்டிருக்காமையின் அடிப்படையில் விலங்குகளை பார்வையிடுவதற்காக வருகைதரும் பார்வையாளர்கள் ஏனைய விலங்குகளுக்காகவும் ஒளிக்கற்றைகளை பாய்ச்சுதல், ஒலி எழுப்புதல் போன்றவற்றால் விலங்குகள் பயத்திற்குள்ளாகலாம் என அவதானிக்கப்பட்டது.

**(ஏ) கோனபொல விலங்குணவுப் பண்ணை**

தெஹிவளை மிருகக்காட்சிசாலையின் மிருகங்களுக்காக புதிய, போசாக்கான, தரமான உணவுகளை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் 1997 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட விலங்குணவுப் பண்ணை 15 ஏக்கர்கள் பரப்பளவினை கொண்டிருந்தது. 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலுமான மூன்று வருட காலப்பகுதியினுள் கோனபெல பண்ணையினூடாக தெஹிவளை மிருகக்காட்சிசாலைக்கு விநியோகிக்கப்பட்ட உணவு தொடர்பில் மற்றும் விலங்குகளின் நலனோம்பல் தொடர்பில் 2018 ஒக்தோபர் 26 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தளப் பரிசோதனையின் போது பெறப்பட்ட அஅவதானிப்புகள் பின்வருமாறு ஆகும்.

(i). தெஹிவளை மிருகக்காட்சிசாலைக்கு தேவையான 28 உணவு வகைகள் கோனபொல பண்ணையினூடாக விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், புற்கள், கங்குங் மற்றும் கரும்பு போன்ற உணவு வகைகளை தவிர ஏனைய உணவு

வகைகளில் கருத்திற்கொள்ளக்கூடிய அளவானது கணக்காய்வு காலப்பகுதியில் கோனபொல பண்ணையிலிருந்து பெற்றுக்கொள்ள தவறியிருந்தது.

(ii). தெஹிவளை மிருகக்காட்சிசாலைக்கு 2018 சனவரி முதல் ஒக்தோபர் வரையான காலப்பகுதியினுள் இளநீர் நுகர்வானது 6611 காய்கள் என அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும், 2017 ஆம் ஆண்டினுள் பண்ணையில் உற்பத்தி செய்த இளநீரின் அளவு மற்றும் 2018 ஒக்தோபர் 26 ஆந் திகதி பண்ணையில் மேற்கொள்ளப்பட்ட தளப்பரிசோதனையின் போது 73 மரங்களின் 5300 இளநீரின் எண்ணிக்கை தொடர்பில் கருத்திற்கொள்ளும் போது மிருகக்காட்சிசாலையில் மேற்படி காலப்பகுதியினுள் வழங்குநர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 5428 எண்ணிக்கையான இளநீர் மற்றும் ரூபா 81,420 தொகையான பணம் பண்ணைக்கு ஏற்பட்ட நட்டமொன்றாக அவதானிக்கப்பட்டது.

(iii). பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக தேவையான நீரினை பெற்றுக்கொள்வதற்காக பண்ணையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பயிர்ச்செய்கை கிணறு நீண்ட காலமாக சுத்திகரிக்கப்பட்டு புனரமைக்கப்பட்டிராததுடன், அதனூடாக பெறக்கூடியதாக இருந்த நீரின் அளவானது குறைவடைந்திருந்தது. இதனால்,

- பவுஸர் ஒன்றின் மூலம் அருகில் அமைந்துள்ள கற்குழியொன்றிலிருந்து நீரினை பெற்றுக்கொள்ள நேர்ந்துள்ளமை.
- பவுஸரினை கொண்டு செலவதற்காக பண்ணையில் அனுமதிப்பத்திரமுடைய நிரந்தர சாரதியொருவர் இல்லாதிருந்தமையால் பண்ணையில் மற்றுமொரு ஊழியரை ஈடுபடுத்துவதற்கு நேர்ந்தமை மற்றும் அது அபாயமான நிலமையொன்றானமை.

(iv). தெஹிவளை மிருகக்காட்சிசாலையின் மிருகங்களுக்காக புதிய, போசாக்கான, தரமான உணவுகளை பெற்றுக்கொடுப்பதற்காக வெளிவாரி வழங்குநர்களிடமிருந்து கூடியளவான உணவினை கொள்வனவு செய்வதற்குப் பதிலாக விளைவிக்கப்படும் உணவின் அளவினை அதிகரிக்க வேண்டிய போதிலும், நிறுவனத்தினால் 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தினுள் கோனபொல பண்ணையினை அபிவிருத்தி செய்தல் மற்றும் ஏனைய மாற்றீடான விலங்கு உணவுகளை விளைவித்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(v). பண்ணை நிலப்பிரதேசத்தின் 10 இனங்களை சேர்ந்த 281 விலங்குகள் காணப்பட்டதுடன், சுமார் 132 கன அடி அளவிலான சிறிய கூண்டுகளில் 130 புறாக்கள் காணப்படுவதுடன், கூண்டானது மிகவும் அசுத்தமான நிலையில் உள்ளதாக அவதானிக்கப்பட்டது.

(vi). விலங்குகளின் சில மருந்துப்பொருட்கள் குளிர்சாதனப் பெட்டியொன்றினுள் வைத்திருத்தல் அவசியமானதென கால்நடை மருத்துவரால் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த மருந்துகளை களஞ்சியப்படுத்துவதற்காக பண்ணையில் குளிர்சாதனப்பெட்டியொன்று காணப்படவில்லை.

### 3.3 உழியர்களின் நலனோம்பல்

மிருகக்காட்சிசாலையொன்றில் விலங்குகளை பாதுகாப்பாக வைத்திருத்தல், காட்சிப்படுத்தல், விலங்குகளின் பேணுகை, விலங்குகளுக்காக சிகிச்சைகளை வழங்குதல், விலங்குகளுக்கு வாழிடங்களை அமைத்துக்கொடுத்தல் மற்றும் விலங்குகளுக்கு உணவு மற்றும் குடிபானங்களை வழங்குதல் போன்ற பணிகளுக்காக பெருந்தொகையான ஊழியர்கள் பங்களிக்கின்றனர். விலங்குப் பொறுபாபளர்கள் மற்றும் கால்நடை மருத்துவர்கள் நாளாந்த கடமைகளில் பெரும்பகுதி நேரத்தினை விலங்குகளுடன் கழிக்கும் பதவியணியில் உள்ளடங்குவர். அவர்களுக்கு பாதுகாப்பாகவும் திருப்திகரமாகவும் அந்த பணியை மேற்கொள்வதற்காக தேவையான உபகரணங்களை வழங்குதல், அந்த உபகரணங்களை பராமரித்தல் மற்றும் தேவைக்கேற்ப சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் அவற்றை பெற்றுக்கொடுத்தலும் இடம்பெற வேண்டும். மிருகக்காட்சிசாலையின் பதவியணிக்காக வழங்கப்பட்டிருந்த நலனோம்பல் வசதிகள் தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

#### 3.3.1 ஊழியர்களுக்கு ஏற்படும் விபத்துகள்

தெஹிவளை மிருகக்காட்சிசாலையிலுள்ள கிரேட்டா கூண்டுகள், குவான்கோ, கழுதை போன்ற விலங்குகளில் கூண்டுகளை சுத்தப்படுத்தும் போது அந்த விலங்குகள் அந்த இடத்திலேயே ஒதுக்கப்பட்டு சுத்தம் செய்தல் பொருத்தமானதெனினும், அவ்வாறு செய்வதற்கு வசதிகள் இல்லாதிருந்தமையால் விலங்குகள் கூண்டினுள் இருக்கும் போதே ஊழியர்களால் சுத்தம் செய்யப்படுகின்றது. இது ஊழியர்கள் விபத்துக்குள்ளாகுதல் பேன்றே உயிராபத்திற்குள்ளாக காரணமாக அமையும் என அவதானிக்கப்பட்டது.

#### 3.3.2 ஊழியர்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தான நிலமைகள்

யானை மடுக்களை சுத்தப்படுத்துவதற்காக யானைகளை கட்டிவைப்பதற்காக தனியானதொரு இடம் இல்லாதிருந்தமையால் நாரம்பெத்த தொற்றொதுக்க நிலையத்தின் யானைகள் மடுவினுள் கட்டப்பட்டிருக்கும் போதே ஊழியர்களால் சுத்தமாக்கல் இடம்பெறுவதுடன், இது மிகவும் ஆபத்தான நிலமையொன்றாகும்.

#### 3.3.3 ஊழியர்களுக்கு தேவையான வழிகாட்டிகள்

விலங்குகளின் வாழிடங்களை சுத்தம் செய்யும் போது விலங்குப் பொறுப்பாளர்களால் பாதுகாப்பிற்காக பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் என்ன என்பது தொடர்பில் வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதன் போது விலங்குகளுக்கு பொறுப்பானவர்களால் கூண்டுகளை சுத்தம் செய்யும் போது விலங்குகளை தடுத்து வைக்கக்கூடிய இடத்தில் நிறுத்தி வைக்காது கூண்டிலிருந்து வெளியேற்றி பாதுகாப்பு உபகரணங்கள் பயன்படுத்தப்படாது சுத்தப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றமையால் விலங்குப் பொறுப்பாளர்களுக்கு காயங்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறு அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 ஆம் ஆண்டின் போது நீர் யானைகளின் வாழிடத்தில் சேவையாற்றிய விலங்குப் பொறுப்பாளரின் கையை நீர் யானை கடித்திருந்தமை.

(ஆ) ஆந்தைகளின் கூண்டினை சுத்தம் செய்யும் போது விலங்குப் பொறுப்பாளருக்கு காயம் ஏற்படுத்தியிருந்தமை.

#### 3.3.4 முடக்க நிலைக்கு உள்ளாகும் ஊழியர்களின் குடும்பங்களுக்கான நலனோம்பல்

மிருகக்காட்சிசாலையின் ஊழியர்கள் கடமையில் ஈடுபட்டிருக்கும் போது ஏற்படும் அவசர விபத்துக்கள் தொடர்பில் மருத்துவமனைக்கு அனுமதிக்கப்படுவதன் மூலம் அவர்கின் குடும்பங்களுக்கு ஏற்படும் பொருளாதார சிக்கல்கள் மற்றும் மேலதிக செலவினங்களை தீர்ப்பதற்கு நலன்களை செலுத்தும் முறையொன்று மிருகக்காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலனோம்பு நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 2013 சனவரி 15 ஆந் திகதிய திணைக்களக் கட்டளை 2013/02 இன் பிரகாரம் கடமையில் ஈடுபட்டுள்ள போது ஏற்படும் அவசர விபத்துகளுக்காக உத்தியோகத்தரின் மரணத்தின் போது ரூபா 250,000 வரையிலும்,

முழுமையான முடக்க நிலைக்கு உட்படும் போது ரூபா 250,000 தொகை வரையிலும், மற்றும் நிரந்தரமாக பகுதியளவில் ஊனமுற்றால் ரூபா 150,000 தொகையும், மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற வேண்டிய நிலையின் போது ரூபா 10,000 முதல் ரூபா 50,000 வரையிலும் நட்டஈடு செலுத்த தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நட்டஈட்டுத் தொகை காலரீதியாக திருத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**3.3.5 பயிற்சிகள்**

WAZA சங்கத்தின் வழிகாட்டி மற்றும் நெறிமுறைக் கோவையில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கமைய விலங்குகளுடன் சமீபமாக கடமையாற்றும் அனைத்து பதவியணியும் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்பட்ட பதவியணியாக இருக்க வேண்டும். அவர்கள் நோய்கள், காயங்கள், மனவுளைச்சல் ஆகிய விலங்குகளின் அறிகுறிகளை இனங்காணக்கூடிய இயலுமையை கொண்டிருக்க வேண்டும். அவ்வாறே விலங்குகள் தப்பிச்செல்லும் சந்தர்ப்பத்தில் மற்றும் தாக்குதல் மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் போன்ற அவசர நிலமைகளின் போது செயற்பட வேண்டிய விதம் தொடர்பான பயிற்சியினை பெற்ற தொகுதியினாக இருத்தல் விலங்கு நலனோம்பல் பணிகளை சிறப்பான முறையில் பேணிச் செலவிதற்கு முக்கியமானதாகும். அவ்வாறெனினும், மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் செயல்வழிக் கோவையினுள் விலங்குகள் தொடர்பில் நேரடியாக பணியாற்றும் விலங்குப் பொறுப்பாளர்கள், விலங்கு கட்டுப்பாட்டாளர்கள் போன்ற பதவயணிக்காக மேற்படி துறையில் நிபுணத்துவம் ஏற்படும் வகையில் பயிற்சிகளை வழங்குதல் தொடர்பில் நடைமுறையொன்று குறிப்பிடப்படாமையால் குறித்த ஊழியர்களுக்கு அவ்வாறானதொரு பயிற்சி கிடைப்பதில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**3.4 பொதுவான அவதானிப்புகள்**

**3.4.1 நாட்குறிப்பு புத்தகங்களில் பதிவுகளை பேணாமை**

மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டுள்ள செயல்வழிக் கோவையின் பிரகாரம் விலங்குகள் தொடர்பில் நாட்குறிப்பு புத்தகங்களில் நாளாந்தம் பதிவு செய்தல் வேண்டும். மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் ஒவ்வொரு விலங்குகளின் பிரிவுகளில் அன்றாட நடவடிக்கைகள் மற்றும் சம்பவங்களை பதிவு செய்வதற்காக நாட்குறிப்பு புத்தகமொன்று பயன்படுத்தப்படும். அந்த நாட்குறிப்பு புத்தகத்தில் விலங்குகளின் பொறுப்பாளர், உதவிக் கட்டுப்பாட்டாளர், பிரதிப் பணிப்பாளர், பணிப்பளார் நாயகம், கால்நடை மருத்துவர்கள் மற்றும் அனைவரும் பதிவினை மேற்கொள்ள வேண்டும். எவ்வாறெனினும், புத்தகத்தின் பராமரிப்பு தொடர்பில் உரிய கட்டுப்பாடொன்று இல்லாதிருந்ததுடன், நாள்தோறும் பதிவுகளை மெற்கொள்வதை போன்றே மற்றொரு கண்காணிப்பு உத்தியோகத்தரின் உரிய கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**3.4.2 குஞ்சுகளை பெருக்குதல்**

மிருகக்காட்சிசாலைகளில் காட்சிக்காக தேவைப்படும் பறவைகளின் தேவைப்பாட்டினை இனங்கண்டு அந்த தேவைப்பாட்டிற்கமைய பறவைகளை பெருக்குவதற்காக முறையான வேலைத்திட்டமொன்று நிறுவனத்திடம் இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. தெஹிவளை மிருகக்காட்சிசாலை, சபாரி பூங்கா மற்றும் கோனபொல பண்ணையில் காட்சிப்படுத்தப்படும் மற்றும் வளர்க்கப்படும் பறவைகளிடமிருந்து வருடாந்தம் பெருமளவு எண்ணிக்கையிலான முட்டைகள் குஞ்சுகள் பிரிவிற்கு கிடைத்திருந்த போதிலும், அந்த முட்டைகளிலிருந்து கருத்திற்கொள்ளக்கூடிய அளவிலான பிறப்புகளை பெற்றுக்கொள்ளவும், பிறந்த குஞ்சுகளை பாதுகாப்பதற்கும் தவறியிருந்ததாக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் விலங்கு நாட்குறிப்பு புத்தகத்தில் அறிக்கையிடப்பட்டிருந்த தகவல்களுக்கமைய அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்னிணைப்பு 01 இல் காணப்படுகின்றது.

(அ) 2017 ஆம் ஆண்டிற்கான விலங்குகளின் விபரங்கள் அடங்கிய புத்தகத்தின் பதிவுகளுக்கமைய தீக்கோழி, மயில், பென்டம் மற்றும் பெசன்ட் முட்டைகள் 22 மாத்திரம் கிடைத்திருந்ததுடன், முட்டைகளை அடைகாக்கும் கருவியில் (Incubator) வைத்தமைக்கான அல்லது குஞ்சுகள் பொறித்தமைக்கான பதிவுகள் காணப்படவில்லை.

(ஆ) குஞ்சொன்றை பொறிக்க வைப்பதற்காக அடைகாக்கும் கருவி பேணப்பட வேண்டிய வெப்பநிலை 98 ⁰f ஆக இருக்க வேண்டும். எனினும் தெஹிவளை மிருகக்காட்சிசாலையின் பறவைகளின் முட்டைகளை அடைகாக்கும் கருவியின் வெப்பநிலை 106 ⁰f ஆக பதிவு செய்யப்பட்டிருந்ததாக 2016 மார்ச் 31 ஆந் திகதிய நாட்குறிப்புப் புத்தகத்தின் பதிவுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. முட்டைகளை அடைகாக்கும் கருவியின் வெப்பநிலை வேறுபடுவதன் அடிப்படையில் பெருமளவு எண்ணிக்கையான முட்டைகள் கெட்டுப்போவதாக 2016 ஆகஸ்ட் 09 ஆந் திகதி நாட்குறிப்பு புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது. முட்டைகளை அடைகாக்கும் கருவியினை பழுதுபார்த்த போதிலும், அதன் மூலம் பொறிக்கும் குஞ்சுகளின் எண்ணிக்கை மிகவும் குறைவானதென்பது அவதானிக்கப்பட்டது.

**3.4.3 விலங்குகள் நலனோம்பு நிதியத்தின் வருமானம்**

தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2018 ஏப்ரல் 20 ஆந் திகதிய BA / BE / 2017 / 01 ஆம் இலக்க கடிதம் மற்றும் 2018 மே 22 ஆந் திகதிய மற்றும் BA / BE / 2017 / 01 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலுமான 5 வருட காலப்பகுதியினுள் மிருகக்காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலனோம்பு நிதியத்தின் வருமானம், செலவினம், திறைசேரிக்கான அனுப்பிவைத்தல்கள் மற்றும் செலவினங்கள் மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் வங்கிக் கணக்கிற்கான மாற்றல்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| **வருடம்** | **மொத்த பெறுவனவு (ரூபா)** | **மொத்த செலவினம் (ரூபா)** | **மிருகக்காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலனோம்பு நிதியத்தினால் திறைசேரிக்கான அனுப்புதல்கள் (ரூபா)** | **திணைக்களத்தின் வங்கிக் கணக்கிற்கு மாற்றல்கள் (ரூபா)** | **வேறுபாடு (ரூபா)** |
|---|---|---|---|---|---|
| 2013 | 727,149,211 | 628,235,541 | 145,839 | 99,000,000 | (232,169) |
| 2014 | 911,518,926 | 798,621,864 | 59,416,514 | 65,000,000 | (11,519,452) |
| 2015 | 1,038,323,207 | 620,503,849 | 51,525,401 | 230,000,000 | 136,293,957 |
| 2016 | 1,098,522,091 | 586,501,652 | 106,444,969 | 395,000,000 | 10,575,470 |
| 2017 | 999,126,643 | 642,788,820 | 100,132,560 | 277,000,000 | (20,794,737) |
| **மொத்தம்** | 4,774,640,078 | 3,276,651,726 | 317,665,283 | 1,066,000,000 | 114,323,069 |

இது தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு ஆகும்.

(அ) 2013 முதல் 2017 ஆம் ஆண்டு வரையான 5 வருட காலப்பகுதியினுள் மிருகக்காட்சிசாலைகள் அபிவிருத்தி நிதியத்திலிருந்து (கணக்கு இலக்கம் 0007042658) கிடைத்த ரூபா 4,774,640,078 தொகையில் மிருகக்காட்சிசாலைகள் அபிவிருத்தி நிதியத்தின் செலவினங்கள் மற்றும் மாற்றல்கள் கழிக்கப்பட்டதன் பின்னர் ரூபா 114,323,069 தொகையான பற்றாக்குறையொன்று நிலவுவதாக அஅவதானிக்கப்பட்டது. இந்த வேறுபாட்டிற்கான காரணம் மிருகக்காட்சிசாலைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2018 மே 22 ஆந் திகதி BA / BE / 2017 / 01 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் பின்வருமாறு ஆகும்.

I. பாதீட்டு மதிப்பீட்டிற்குரிய மூலதன செலவினங்கள் அபிவிருத்தி நிதியத்தின் நிதியினூடாக செலவிடப்பட்டு பணம் மாற்றப்படாது செலவினங்கள் மாத்திரம் பாதீட்டு மதிப்பீட்டிலிருந்து மாற்றப்பட்டிருந்தது.

II. அபிவிருத்தி நிதியத்தின் மூலதன செலவினங்கள் பாதீட்டு மதிப்பீட்டின் நிதியினூடாக செலவிடப்பட்டு பணம் மாற்றப்படாது செலவினங்கள் மாத்திரம் அபிவிருத்தி நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

III. அபிவிருத்தி நிதியத்திற்குரிய பொது வைப்புக்கணக்கிற்கு காசு பெறுவனவு மற்றும் காசு செலுத்தல்கள் வருமானம் மற்றும் செலவினத்தை கணிப்பிடுவதற்கு உள்ளடக்கப்பட்டிராமை.

(ஆ) மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் பாதீட்டு மதிப்பீட்டில் செலவினங்களை மேற்கொள்வதற்காக நலனோம்பு நிதியத்தில் பேணப்படும் பணத்தில் தேவையான அளவினை மாற்றுவதற்கான அங்கீகாரம் திறைசேரிகள் செயற்பாட்டுத் திணைக்களத்தினால் 2012 திசெம்பர் 10 ஆந் திகதி முதல் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான விலங்குகள் நலனோம்பு நிதியத்திற்கு மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்திடமிருந்து பெற வேண்டிய தொகை ரூபா 2,710,959,560 ஆகும்.

## 04. பரிந்துரைகள்

### 4.1 உணவு மற்றும் நீர்

**4.1.1** அனைத்து விலங்கிற்கும் உரிய அளவில் மற்றும் உரிய நேரத்திற்கு உணவினை வழங்குதல் மற்றும் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரால் குறித்த நடைமுறை கண்காணிக்கப்படல். (3.2.4 - (இ),(ஈ),(உ),(ஊ),(எ),(ஏ))

**4.1.2** விலங்குகளுக்கு இலகுவாக உணவு உட்கொள்ளக்கூடிய முறையில் மற்றும் ஏனைய வெளிவாரி விலங்குகளிடமிருந்து உணவு பாதுகாக்கப்படும் வகையில் உணவினை வைத்தல்.(3.2.4-(ஆ)(I)(II)).

**4.1.3** களி மற்றும் பிடி யானைகளுக்கு உணவினை வழங்கும் போது அவை அவற்றின் மலம் மற்றும் சிறுநீருடன் கலக்காதவாறு பெற்றுக்கொள்ளக்கூடிய முறையில் பொருத்தமான உயரத்தில் வைத்தல்.(3.2.8.-(இ)(I)).

**4.1.4** இலை தளைகளை உணவாக உட்கொள்ளும் விலங்குகளுக்காக மருத்துவரால் வழங்கப்பட்ட உணவுப் பட்டியலுக்கமைய வழங்குநர்கள் உரிய முறையில் விநியோகிக்காத சந்தர்ப்பத்தில் மாற்று உணவினை பெற்றுக்கொள்ளக்கூடிய வழிமுறையயொன்றினை உருவாக்குதல். (3.2.8-(ஆ)(I)(II))

**4.1.5** தெஹிவளை மிருகக்காட்சிசாலையிலுள்ள யானைகள் உள்ளடங்களான அனைத்து விலங்குகளுக்கும் தேவையான சந்தர்ப்பத்தில் குடிப்பதற்காக போதியளவான நீரினை விநியோகிப்பதற்காக முறையான வேலைத்திட்டமொன்றினை தயாரித்தல். (3.2.8-(ஈ)).

### 4.2 சுகாதாரம்

**4.2.1** விலங்குகளுக்கு உரிய முறையில் சிகிச்சையளிப்பதற்கு மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் பரிசோதனை செய்வதற்கும் கூண்டுகளை சுத்தம் செய்யும் சந்தர்ப்பங்களில் ஊழியர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வகையிலும் விலங்குகளை கூண்டில் அடைக்கக்கூடியவாறு விலங்குகளின் கூடுகளுக்காக நெறிவழியொன்றினை (Crush) நிர்மாணித்தல். (3.2.5 - (ஆ))

**4.2.2** யானைகளின் பாதங்களின் பாதுகாப்பு தொடர்பில் நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தல் மற்றும் அதற்கமைய சிகிச்சை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்திச் செல்லல்.(3.2.8 - (உ)(IV))

**4.2.3** தெஹிவளை மிருகக்காட்சிசாலைக்காக தொற்றொதுக்க வசதிகளை ஏற்படுத்துவதற்காக ஒரு பிரிவில் / கூண்டுகளுக்கு விலங்குகளை மாற்றும் போது கால்நடை மருத்துவருக்கு அறிவித்து அதனை மேற்கொள்ளல். (3.2.1-(அ),(ஆ),(இ))

**4.2.4** மிருகக்காட்சிசாலையிலுள்ள மற்றுமொரு மிருகக்காட்சிசாலைக்கு சொந்தமான மிருகங்களை கொண்டு செல்லும் போது அந்த விலங்கிற்குரிய உணவுப் பட்டியல் மற்றும் சுகாதார பதிவு அறிக்கைகள் போன்ற அனைத்து தகவல்களும் உரிய மிருகக்காட்சிசாலைக்கு வழங்குதல் மற்றும் மிருகங்களுக்கு அசௌகரியமான மற்றும் மனஉளைச்சலின்றி கொண்டு செல்வதற்குரிய வழிவகைகளை மேற்கொள்ளல். (3.2.1-(அ))

**4.2.5** வெளியிலிருந்து வரும் யானைகளை தொற்றொதுக்கம் செய்வதற்கு மற்றும் நோய்வாய்ப்பட்ட யானைகளுக்கு சிகிச்சையளிப்பதற்கு நாரம்பெத்த தொற்றொதுக்கப் பிரிவின் வசதிகளை மேம்படுத்தல். (3.2.8- (உ)(I)(II))

**4.2.6** குஞ்சுகள் பிரிவின் பணிகளுக்காக பயிற்சிபெற்ற ஊழியர்களின் தொகுதியொன்றினை ஈடுபடுத்தல். (3.2.5 (அ))

**4.3** விலங்குகள் உள்ள கூண்டுகள், வாழிடங்கள் மற்றும் தடாகங்களை சுத்தமாக வைத்திருத்தல் மற்றும் அது கண்காணிக்கப்பட்டு பதிவுகளை பேணக்கூடிய முறையில் முறையான வேலைத்திட்டமொன்றினை தயாரித்தல்.(3.2.2 - (அ))

**4.4** மிருகக்காட்சிசாலையிலுள்ள அனைத்து மிருகங்களுக்கும் தேவையான சந்தர்ப்பங்களில் மற்றும் வெயிலிலிருந்து பாதுகாப்பதற்காக மற்றும் உணவுப் பாத்திரங்களை நனையாது வைக்கக்கூடியவாறு கூரையை அமைத்தல். (3.2.6 (அ))

**4.5 சுற்றாடல் அதிகாரச்சட்டங்கள்**

**4.5.1** தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் மற்றும் பின்னவல யானைகள் சரணாலயத்திலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகளுடனான நீரினை அகற்றுவதற்கு சுற்றாடல் அதிகாரச்சட்டங்களுக்கு இணங்கும் வகையில் நடைமுறையொன்றினை தயாரித்து அமுல்படுத்தல். (3.1.6-(அ),(ஆ),(ஈ))

**4.5.2** மிருகக்காட்சிசாலையின் குப்பைக்கூழங்கள், கழிவுகள், மிருகங்களின் இறநித உடல்களை எரிப்பதனால் வெளியேற்றப்படும் வாயுவில் பாதகமான வாயுச் சேர்க்கைகள் உள்ளனவா என்பதை பரிசோதிக்கும் நடைமுறையொன்றினை தயாரித்துக்கொள்ளல். (3.1.6 - (இ))

**4.5.3** எரிதொட்டியில் உரிய கழிவுகளை எரிக்கும் போது உரிய வெப்பநிலையின் கீழ் அதனை மேற்கொள்ளல் மற்றும் அந்த பணி பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பிற்கு உட்படல். (3.1.6 (இ)(I))

**4.6** தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் வாழும் துணையில்லாத விலங்குகளுக்காக தேவையான துணைகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தல். (3.2.2- (ஆ)(II))

**4.7** தெஹிவளை மிருக்ககாட்சிசாலையின் விலங்குகளுக்கான கூண்டுகள் விலங்குகளுக்கு போதியளவிலான இட வசதியுடன் மற்றும் மனங்கவரும் வகையில் அமைத்தல் மற்றும் இற்றுப் போயுள்ள கூண்டுகளுக்கு பதிலாக புதிய கூண்டுகளை அமைப்பதன் மூலம் விலங்குகளின் பாதுகாப்பு மற்றும் பார்வையாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.(3.2.3 - (அ),(ஆ))

**4.8** மிருகக்காட்சிசாலைகள் அதிகாரச்சட்டத்தின் மூலம் மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் நிர்வாகத்திற்கு உட்படாத பின்னவல மிருகக்காட்சிசாலை மற்றும் சபாரி பூங்கா ஆகியவற்றை மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் நிர்வாகத்திற்கு உட்படும் வகையில் மற்றும் விலங்கு மற்றும் ஊழியர் நலனோம்பல் என்பதை வரைவிலக்கணப்படுத்தி 1982 இன் 41 ஆம் இலக்க தேசிய மிருகக்காட்சிசாலைகள் அதிகாரச்சட்டத்தினை திருத்துவதற்குரிய நடவடிக்கை எடுத்தல். (3.1.1, 3.1.2, 3.1.3)

**4.9** நீதிமன்ற கட்டளையின் அடிப்படையில் பின்னவல யானைகள் சரணாலயத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள யானைகளை உரிய நிறுவனங்களுக்கு தேவையான நடவடிக்கைகளை துரிதமாக எடுத்தல். (3.2.9(ஆ),(இ),(ஈ))

**4.10** விலங்குகளின் பாதுகாப்பு, இனவிருத்தி, விலங்குகளின் நடத்தை மற்றும் விலங்குகளுடன் தொடர்புடைய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.(3.2.7)

**4.11** விலங்குகளின் நாளாந்த நடத்தைகளை பதிவு செய்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நாட்குறிப்பு புத்தகத்தில் நாளாந்த குறிப்புகளை உள்ளடக்கி நாளதுவரையாக பேணிச் செல்லல்.(3.4.1)

**4.12** மிருகக்காட்சிசாலையிலுள்ள விலங்குகளுடன் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு, கால்நடை மருத்துவர்களுக்கு, விலங்கு கட்டுப்பாட்டாளர்களுக்கு மற்றும் விலங்குப் பொறுப்பாளர்களுக்கு தமது பணிகளை பாதுகாப்புடன் மிகவும் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு தேவையான பயிற்சிகளை பெற்றுக்கொடுத்தல். (3.3.1, 3.3.3, 3.3.5)

**4.13** விலங்குகளின் மற்றும் பார்வையாளர்களின் பாதுகாப்பிற்காகவும், பார்வையாளர்களால் விலங்குகளுக்கு ஏற்படுத் சேதம் விளைவிக்கும் நடவடிக்கைகளை தடுப்பதற்காகவும், ஊழியர்களின் பணிகள் உரிய முறையில் இடம்பெறுகின்றதா என்பதை கண்காணிப்பதற்காகவும், விலங்குகளின் கூண்டுகளுக்கு அருகே மற்றும் தேவையான இடங்களில் CCTV கெமரா கட்டமைப்பொன்றினை பொருத்துதல். (3.2.4 – (உ))

**4.14** மிருகக்காட்சிசாலைகளுக்காக மிருகங்களின் மற்றும் ஊழியர்களின் அனைத்து நலனோம்பு பணிகளும் உள்ளடங்கும் வகையில் விரிவான மற்றும் திட்டவட்டமான வழிகாட்டிகள் கோவையொன்றினை தயாரித்து நாளதுவரையாக்கி பேணிச்செல்லல். (3.1.5)

**4.15** ஊழியர்களுக்கான போதிளயவான காப்புறுதியொன்றினை வழங்குதல். (3.3.4)

**4.16** மிருகக்காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலனோம்பு நிதியத்திற்குரிய வருமானம் மற்றும் செலவினங்களை சரியாக இனங்கண்டு சரியாக கணக்கு வைத்தல் மற்றும் மிருகக்காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலனோம்பு நிதியத்தில் காணப்படும் நிதிகளை தொடர்ந்தும் நிறைவேற்றப்பட வேண்டிய விலங்குகளின் நலனோம்பு பணிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். (3.4.3)

**4.17** தெஹிவளை மிருகக்காட்சிசாலையின் விலங்குகளுக்காக வருடம் முழுவதும் புதிய உணவுகளை பெற்றுக்கொடுப்பதற்காக மற்றும் நிலப்பரப்பின் உச்ச பயன்பாட்டினை பெற்றுக்கொள்வதற்கு இயலுமான வகையில் கோனபொல பண்ணைக்காக உணவு தயாரிக்கும் திட்டமொன்றினை தயாரித்து பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அந்த பணிகளை சிறப்பான முறையில் பேணிச் செல்ல தேவையான நீர் வசதிகள் மற்றும் ஏனைய உபகரணங்களின் தேவைப்பாட்டினை வழங்குதல். (3.2.10 (ஏ))

**4.18** கோனபொல பண்ணையில் வாழும் புறாக்களுக்காக போதியளவு இடவசதியுடனான கூண்டில்களை அமைத்தல் மற்றும் அதனை சுத்தமாக பேணுவதற்குரிய நடவடிக்கை எடுத்தல். (3.2.10(ஏ)(V))

## 5. முடிவுரை

மிருகக்காட்சிசாலைகளில் விலங்குகளை காட்சிப்படுத்துவதன் மூலம் பார்வையாளர்களுக்கு களிப்பு மற்றும் அறிவினை பெற்றுக்கொடுப்பதன் மூலம் வருடாந்தம் சுமார் ஒரு பில்லியனுக்கு அண்மிய வருமானத்தினை அரசிற்கு ஈட்டிக் கொடுப்பதன் மூலம் பொதுச் சொத்தொன்றாக மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தினால் விசேடமான பணிப்பொறுப்பொன்று நிறைவற்றப்பட்டிருந்த போதிலும், இனங்காணப்பட்ட அவதானிப்புகளுக்கமைய விலங்குகளின் நலனோம்பல் மற்றும் ஊழியர்களின் நலனோம்பல் தொடர்பில் தொடர்ந்தும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**பின்னிணைப்பு 01**

**2016 ஆம் ஆண்டில் அடைகாக்கும் பொறியினுள் வைக்கப்பட்ட முட்டைகளின் விபரம்**

| விலங்கின் பெயர் | அடைகாக்கும் பொறியினுள் வைத்த முட்டைகளின் எண்ணிக்கை | பிறப்புகளின் எண்ணிக்கை | முட்டைகளுக்கு ஒப்பாக பிறப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பெசன்ட் | 756 | 12 | 1.5% |
| வாத்து | 23 | 11 | 47.8% |
| பென்டம் | 104 | 03 | 2.8% |
| கெசோவரி | 04 | 0 | 0 |
| ஹெல்மஹோரா | 08 | 0 | 0 |
| மயில் | 08 | 0 | 0 |
| சீனா பெசன்ட் | 134 | 0 | 0 |
| ஏமு | 05 | 05 | 0 |
| ரிதீ பெசன்ட் | 27 | 0 | 0 |
| தீக்கோழி | 36 | 03 | 2.7% |